# பாட்டாளி சிந்தனை

Volume 25 No. 6

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

February 2015

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


# சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளின் தலைவரான ஓபாமாவே மோடி தலைமையிலான பாஜக அரசாங்கத்தின் சிறப்பு விருந்தினர்

எதேச்சதிகார ஏகாதிபத்திய அரசின் தலைவருக்கு மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் சிவப்பு கம்பளத்தை விரித்துள்ளது. அந்த அரசுதான் தனது நாசகர வல்லாதிக்க நலனுக்கு சேவகம் புரிவதற்காக கணக்கில்லா கொடூரத்தனத்துடன் கூடிய சர்வதேச கூட்டு வல்லாதிக்கவாதத்திலும், சர்வாதிகாரமான அடக்கு முறையிலும், தலைமையரசவாதத்திலும் ஈடுபட்டு வருகிறது. அதே அரசுதான் தீவிர வாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் பி–2 அணுகுண்டு வீசும் விமானங்கள் மற்றும் ஆளில்லா போர் விமானங்கள் வாயிலாக 'ஜனநாயகத்தை' மேற்கு ஆசியாவின் பல்வேறு நாடுகளுக்கும் வேறு பலநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துவருவதோடு, ஒவ்வொருநாடாக துப்பாக்கி முனையில் மக்களை 'நாகரீகமயமாக்கிவருகிறது'. இதே அரசுதான் உலகம் முழுவதும் தீவிர வாதத்தைப் பரப்பி விமானங்கள் மூலம் குண்டுவீசியும் அணு ஆயுதம் உள்ளிட்ட நாசகார ஆயுதங்களைப் பயன்படுத்தி லட்சக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை கொத்துக்கொத்தாகக் கொன்றுகுவித்து வருகிறது. இதே அரசுதான் சர்வதேச நியதிகள், விதிமுறைகள், சட்டங்கள், உடன்படிக்கைகள் மற்றும் நடைமுறைகளை மதிக்காது காலிலிட்டு மிதித்து சட்டவிரோதமாகத் தாக்குதல்தொடுத்து அப்பட்டமான ராணுவத் தலையீட்டின் மூலமாகவும் வன்முறைகளைத் தூண்டி விட்டும் பொய் புரட்டுகளைப் பரப்பிவிட்டும் பல்வேறு இறையாண்மையுள்ள தேசங்களை ஆக்கிரமித்துள்ளது. தனக்கும் தனது ஆயுத பலத்திஹற்கும் முன்பாக மண்டியிட மறுக்கும் அரசுகளை மோசமானவர்கள் என்று முத்திரை குத்தி அந்த நாடுகள் மீது சட்ட விரோத மாகவும் நெறிகளுக்கு முரணாகவும் பொருளாதாரத் தடைகளையும் விதிப்பதும் இதே அமெரிக்க அரசுதான். மனித குலத்திற்கு எதிராக இத்தகைய கொடுமையான குற்றங்களை செய்துவரும் அந்த ஏகாதிபத்திய அரசின் தலைமையைத்தான் நாட்டின் 66வது குடியரசு தின விழாவின் சிறப்புவிருந்தினராக கௌரவப்படுத்துவதற்கு மோடியும் பாஜக, ஆர்எஸ்எஸ்சும் தேர்வு செய்துள்ளனர்.

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்ளைகளும் அடக்குமுறை குற்றங்களும்

தொடர்ச்சியான கொலை மற்றும் கொள்ளை, உலகம் முழுவதிலும் உள்ளூர் மற்றும் பகுதியளவு போர்களை உருவாக்குதல், பிராந்தியப் பகை – இன மோதல்களையும் கிளர்ச்சிகளையும் தூண்டிவிட்டு பல்வேறு நாடுகளை நிலை குலையச் செய்ய சூழ்ச்சி செய்தல், மற்ற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது, ஜனநாயகக் கோட்பாடுகளைக் காலிலிட்டு மிதிப்பது, உளவு பார்த்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றவைகளே கடந்த பல பத்தாண்டுகளில் அமெரிக்காவின் வரலாறாக உள்ளது. அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் அனைத்துவிதமான இழிவான தந்திரங்கள், சூழ்ச்சிகள், தலையீடுகள், தாக்குதல்கள், கீழ்படியச்செய்தல், மற்றும் பணபலம் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றனர் அதுமட்டுமல்லாது தனது சொந்த நலனுக்காகவும் தனது விருப்பத்திற்காகவும் உலகின் வளங்களின் மீது தனது வல்லாதிக்கத்தை உருவாக்குவதற்காகவும் தங்களது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக போர் அச்சுறுத்தல் மனநிலையை உருவாக்கி வருகின்றனர். முன்கூட்டியே போர் தொடுக்கும் வெறுக்கத்தக்க திட்டத்தை மனிதகுல நாகரீகத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பரிசாக அளித்துள்ளனர். இதன்மூலம் தங்களது உத்தரவுக்கு கீழ்படியாதவர்கள், அல்லது தங்களுக்கு அபாயகரமானவர்களாகி விடுவார்கள் என்று எந்தவொரு நாட்டையும் தாங்கள் கருதிவிட்டாலே அந்நாட்டின் மீது தாக்குதல் தொடுத்து அழித்தொழிக்கும் அளப்பரிய அதிகாரத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தாங்களாகவே உருவாக்கிக்கொண்டுள்ளனர். யுஎஸ் ஏகாதிபத்திய முதலைகள் சிஐஏ, பென்டகன் மற்றும் அவர்களது ஏஜெண்டுகளைப் பயன்படுத்தி ஐரோப்பா–ஆசியா–ஆப்பிரிக்கா–தென் அமெரிக்கா போன்ற பகுதிகளில் உள்ள ஒவ்வொரு நாடாக தில்லுமுல்லுகளையும் ஊடுருவல்களையும் நடத்தியது, *1947* இல் கிரீசிலும், *1953* இல் ஈரானிலும், *1954* இல் குவாதமேலாவிலும், *1965* இல் இந்தோனேசியாவிலும், *1973* இல் சிலியிலும் அமெரிக்கா நடத்திய அத்துமீறல்கள் இவற்றிற்கு ஒருசில உதாரணங்களே. கிட்டத்தட்ட உலகின் அனைத்து மூலைகளிலும் அவர்கள் ராணுவ நிலைகளை உருவாக்கியுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் *1965* இல் டொமினிகன் குடியரசிலும், *1983* இல் கிரெனெடாவிலும், *1989* இல் பனாமாவிலும் ஊடுருவினர். 'மொன்ரோ திட்டத்தை' பின்பற்றி *1914* முதல் *1933* வரை தென் அமெரிக்காவின் பல நாடுகளின் விவகாரங்களில் அமெரிக்க வல்லாதிக்கவாதிகள் தலையிட்டனர்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஜெர்மன் மொழிக்குப் பதிலாக சமஸ்கிருதம்

# உண்மையான உள்நோக்கமும் அபாயமும் என்ன?

மத்தியில் அதிகாரத்திற்கு வந்திருக்கின்ற பிஜேபி அரசாங்கத்தால் நாட்டின் கல்வித் துறையில் எடுக்கப்பட்டுவரும் சில விரும்பத்தகாத நடவடிக்கைகளைக்கண்டு உண்மையான விஞ்ஞானபூர்வ, மதச்சார்பற்ற மற்றும் அனைவருக்கும் சமமான (universal) கல்வியின் எதிர்காலம் குறித்து அக்கறைகொள்ளும் மக்கள் பேரதிர்ச்சிக்குள்ளாகியிருக்கின்றனர். ஆர்எஸ்எஸ்–பிஜேபி கூட்டணியானது தனது இந்துத்துவா அஜெண்டாவை புத்தூக்கமூட்டப்பட்ட தீவிரத் துடன் கல்வித் துறையில் திணிக்கும் முயற்சியே இந்நடவடிக்கைகள் என்பதில் சந்தேகமில்லை. 'இந்தியப் பெருமை'யை புதுப்பொழிவு பெறச் செய்வது, 'மேற்கத்திய மயமாக்கல்' என்பதிலிருந்து கல்வியை விடுவித்து இந்தியமயமாக்குவது என்றெல்லாம் சொல்லி, அவர்கள் தங்களுடைய ஆரம்ப நாட்களின் வார்த்தைகளை புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் கல்வியை முழு அபாயத்திற் குள்ளாக்கும் ஒரு பாசிச நடவடிக்கைகளே இவை என்பதை அம்பலப்படுத்தி எமது மாநிலப் பத்திரிகையான பாட்டாளி சிந்தனையில் ஜனவரி *2015* இதழில் கட்டுரை வெளியிட்டிருந்தோம். இதுபோன்ற பதப் பிரயோகங்களின் திரை மறைவில் குருட்டு நம்பிக்கை, பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்கள், இந்து சமயக்கோட்பாடு, வேதம் மற்றும் வேதாந்தத்தினடிப்படையிலான நமது பாரம்பரிய கல்வி என்பதையெல்லாம் புகுத்தி நவீன விஞ்ஞானபூர்வ மதசார்பற்ற கல்வியை முழுமையாக அழித்தொழிப்பதே அவர்களின் உள்நோக்கமாகும்.

அதேசமயம், உலகச் சந்தை மற்றும் தேவைக்கு உகந்தவகையில் 'தகுதியாதல்' என முன்னேறிய இயந்திரமயமான தொழில்நுட்பரீதியிலான கல்வியை கல்வி என முத்திரைக்குத்தி மக்களின் குறிப்பாக இளைஞர்களின் நல்ல வசதிவாய்ப்பு பெற்ற ஒரு பிரிவினரை கவர்ந்திழுப்பதன்மூலம் இம் முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்க முயல்கிறார்கள். உண்மையான விஞ்ஞானபூர்வ அறிவின் இறக்குமதிக்கு பதிலாக குருட்டு நம்பிக் கையையும் இயந்திரகதியிலான சிந்தனையையும் கலந்து படைமுறைப்படுத்தப்பட்ட (Regimented thinking) சிந்தனைகள் மற்றும் உண்மையை தேடவும் அறிந்துகொள்ளவுமான பகுத்தறிவு சக்தியை இழந்த, அநீதி, ஒடுக்குமுறை, சுரண்டலுக்கு எதிராக எழும் தைரியத்தை இழந்த, மனிதத் தன்மையற்ற இயந்திர மனிதனாக இளைஞர் களை மாற்ற விரும்புகிறார்கள். தற்போதுள்ள இந்த முதலாளித்துவ அமைப்பு முறையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண் டிருக்கும் அவர்கள், இவ்வமைப்பு முறையை நன்கு பாதுகாக்க இது உதவும் என்று விரும்புகிறார்கள்.

இவ்வாறான இந்த இந்துத்துவா பிரச்சார மானது ஓயப்போவதில்லை. கேந்திரிய வித்யாலயங் களில் (Kendriya Vidyalaya) ஜெர்மன் சொல்லித் தருவதா அல்லது சமஸ்கிருதமா என்ற பிரச்சினை யைத் தொடர்ந்து இது புதிய வடிவெடுத்தி ருக்கிறது. கேந்திரிய வித்யாலயங்களில் இது அமுல்படுத்தப்பட்டபின்பு மற்ற பள்ளிகளுக்கும் இது தொடருமோ என்ற அச்சம் அரசாங்கத்தின் அறிவிப்பினால் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினை குறித்து என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள இது சம்மந்தமாக உள்ள சில தகவல்களை நாம் பார்க்கவேண்டும்.

நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பிரதான நான்கு வகைப் பள்ளிகளில் ஒருவகை யாகும் கேந்திரிய வித்யாலயங்கள் (கேவி). தங்க ளுக்குரிய சேர்த்தல்கள், மாற்றங்களைக் கொண்டு சிபிஎஸ்இ(CBSE)இன் பாடத்திட்டத்தையே கேவிக்கள் (கேந்திரிய வித்யாலயங்கள்) பின் பற்றுகின்றன. கேந்திரிய வித்யாலயா சங்கதனின் போர்டு ஆஃப் கவர்னர்களுக்கு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரே தலைவராவார். மேலும், இன்றைய தனியார்மய காலகட்டத்தில் கேவிக்களின் பள்ளிகள் மத்திய அரசாங்கத்தின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

### மும்மொழிக்கொள்கை மொழிக்கற்பித்தலின் அடிநாதத்தையே அழிக்கிறது

மொழிக் கற்பித்தலானது கடந்த நூற்றாண்டின் 60களில் மத்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் 'மும் மொழிக் கொள்கை'யால் வழிநடத்தப்பட்டது. பின்பு, பிறக் கட்சிகளின் அரசாங்கங்களும் பல் வேறு காலங்களில் இக்கொள்கையை பெரும் பாலும், அடிப்படையாகவும் ஏற்றுக் கொண்டன.

தொடர்ச்சி 3ம் பக்கம்

# கொள்ளைகளும் படுகொலைகளுமே கடந்த பல பத்தாண்டுகளாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வரலாறாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

இதில் ஹைத்தியை 19 ஆண்டுகள் ஆக்கிரமித்தது, டொமினிகன் குடியரசை 18 ஆண்டுகள் ஆக்கிரமித்தது, பனாமா நாட்டை பல முறை ஆக்கிரமித்தது, நிகராகுவாவை 8 ஆண்டுகள் ஆக்கிரமித்தது இன்னும் இதுபோன்ற பல உதாரணங்கள் உள்ளன. அவர்கள் 1950 இல் கொரிய ஜனநாயகக் குடியரசுமீது தாக்குதல் தொடுத்தனர், 1961 இல் சோசலிச கியூபாவைத் தாக்கினர், இந்தோ–சீனாவுக்கு எதிராக, குறிப்பாக வியட்னாம் மற்றும் கம்போடியா மீது ஐம்பதுகளின் இறுதி முதல் எழுபதுகளின் மத்திய பகுதிவரை அவர்கள் பேரழிவு போர்களைத் தொடுத்தனர். ஹோண்டுராசை இருந்த கான்ட்ராஸ்களின் உதவியோடு அவர்கள் இறையாண்மை நாடான நிகராகுவாவில் ஆட்சியைக் கவிழ்த்தனர். எல்லா இடங்களிலும் அந்தந்த உள்நாட்டு மக்களை கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்தனர். பிலிப்பைன்வாசிகள், இந்தோ–சீனர்கள், தென் அமெரிக்கர்கள், ஆசியர்கள் மற்றும் ஆப்பிரிக்கர்களை ஆயிரமாயிரமாகக் கொன்று குவித்தனர். பாலஸ்தீன மக்கள் மீது யூதவெறி இஸ்ரேல் போர் தொடுத்து மக்களைக் கொன்று குவித்து அந்த நிலப் பரப்புகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவோடு தான் நடைபெற்று வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இந்த அத்துமீறல்களுக்கு சமீபத்திய உதாரணங்களாக ஈராக், ஆப்கானிஸ்தான், ஹைத்தி, சூடான், யூகோஸ்லேவியா, போஸ்னியா, கொசோவா, லிபியா போன்ற நாடுகள் பலியாகியுள்ளன. பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக முழுக்க முழுக்க பொய்யான காரணத்தைக் கூறி ஈராக்கைத் தாக்கிய அவர்கள் அங்கே அப்பாவி பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட லட்சக்கணக்கான மக்களைக் கொன்றுகுவித்தனர். அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிய மறுத்த அந்நாட்டின் அதிபர் சதாம் உசேனையும் கொன்றனர். அங்கே ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவியதோடு அங்குள்ள ஒரேமதத்தின் இரு பிரிவினரிடையே மோதலைத் தூண்டிவிட்டு அங்கு அதுவரை இருந்த மதச் சார்பற்ற ஒற்றுமைக்குப் பாதகம் விளைவித்து அமைதியைக் குலைத்தனர்.

முன்னொருகாலத்தில் அமெரிக்காவே உருவாக்கிய அல்கொய்தாவையும் அதன் தலைவன் பின்லேடனையும் பிடித்து அழிக்கிறோம் என்ற போர்வையில் ஆப்கானிஸ்தானை தங்களது ராணுவ–அரசியல் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டனர். நேட்டோ படை தாக்குதலின் மூலம் லிபியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரைத் தூக்கியெறிந்தனர். மேற்கு அரைக்கோளத்தில் உள்ள ஹைத்தியில் நேரடியான ராணுவத்தாக்குதல் தொடுத்தும், மிகமோசமான அரசியல் தந்திரத்தைப் பயன்படுத்தி பொருளாதாரச் சிக்கலை உருவாக்கிய அவர்கள் அந்நாட்டின் ஜனநாயகப்பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரையே கடத்திவிட்டனர். சூடானில் நிலவிய மோதலை ஊதிப் பூதாகரமாக்கி அந்நாட்டில் பிளவை ஏற்படுத்தினர். சிரியா நாட்டு அதிபரைக் கவிழ்ப்பதற்காக அந்நாட்டில் உள்நாட்டுப் போர் செய்வதற்காக சிரிய விடுதலை ராணுவம் (Free Srian Army - FSA) ஒன்றை உருவாக்கி அதற்கு தாராளமாக நிதியுதவி, நவீன ராணுவத் தளவாடங்கள் மற்றும் ராணுவப் பயிற்சியையும் அளிக்கின்றனர். இந்த நடவடிக்கைகளுக்கெல்லாம் உண்மையான நோக்கம் என்பது எண்ணெய் வளமிக்க மத்திய கிழக்குப் பகுதிகள் மீது தாக்குதல் தொடுத்து அபகரிக்க வேண்டும் என்பதே ஆகும். பால்கன் மாகாணங்களைப் பிரித்து அங்கே அமெரிக்க ஆதிக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற தங்களது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக யூகோஸ்லேவியாவை உடைப்பதில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஆற்றிய நாசகார பங்கை நம்மால் மறக்க முடியாது. யூகோஸ்லேவியாவிலிருந்து போஸ்னியா மற்றும் கொசோவா மாகாணங்களைப் பிரிப்பதற்காக உள்நாட்டுப் போரைத் தூண்டுவதிலும் நேரடியான ராணுவத் தலையீட்டின் மூலம், போஸ்னியா மற்றும் கொசோவாவின் பிரிவினைவாத சக்திகள் வெற்றிபெறுவதிலும் அவர்கள் முக்கியப் பங்காற்றினர். இப்படியாக, தங்களது ராணுவ பலத்தைப் பயன்படுத்தி, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலகில் உள்ள பலகீனமான மற்றும் சிறிய நாடுகள் மீது எல்லையற்ற கடுமையான தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் குரூரத்தன்மை, மனிதநேயமற்ற காட்டு மிராண்டித்தனம், அதிகாரப் பித்து மற்றும் ரத்த வெறிக்கும், தங்களது ஏகாதிபத்திய நலன்களை நிறைவேற்றுவதற்காக அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் மனித குலத்திற்கு எதிராக எப்படிப்பட்ட குற்றத்தையும் இழைக்க எப்படித் தயங்க மாட்டார்கள் என்பதற்கு பாலஸ்தீனம், சோமா லியா, ஹைத்தி, கொசோவா–யூகோஸ்லேவியா, ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா என இவை எல்லாமே சான்றாக விளங்குகின்றன. சமூக மோதல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்கள் பெருகிவருவதன் பின்னணியில் இந்த ஏகாதி பத்தியத்தின் தலைவனின் திட்டமும் தந்திரமும் உள்ளது, கொத்துக் கொத்தாகக் கொலைசெய்தல் மற்றும் இனப்படுகொலைகளில், மிகவும் காட்டு மிராண்டித்தனமான, சிலநேரங்களில் கொடிய அணுகுண்டு வீச்சுகளிலும், அதோடு கொலை வெறி ராணுவத் தாக்குதலில் ஈடுபட்டு அப்பாவி பெண்கள்–குழந்தைகள்–வயதானவர்களை கொன்று குவிக்கும் அவர்கள் அவற்றையெல்லாம் போர்களில் ஏற்படும் சேதாரங்கள் என்று சாதாரணமாகக் கூறிவிடுகின்றனர். உலகம் முழுவதிலும் நடைபெறும் இந்த காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்களின் பின்னணியில் போர்–வெறிபிடித்த லாபப்– பசியெடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் கோரமுகமே இருக்கின்றது.

ஏகாதிபத்தியத்தின் குணாம்சத்தை ஆய்வுசெய்த மாபெரும் லெனின், 'ஏகாதிபத்தியம் போரை உருவாக்குகிறது' என்று நீண்ட காலத்திற்கு முன்பே கூறினார். போர் இல்லாமல், ஏகாதிபத்தியத்தால் உயிர்வாழ முடியாது. அவர்களது இருப்பை நீடித்துக்கொள்ள போர் அவசியம். போர் என்பது தான் அவர்கள் வாழும் முறையே. லெனினின் ஆய்வு எவ்வளவு சரியானது என்பதை முதலாம் மற்றும் இரண்டாம் உலகப்போர்கள் நிரூபித்தன. உலகப்போர்களுக்கும் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பாத்திரம் லெனினது கணிப்புகளை மேலும் நிரூபித்தன. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு போர் வியாபாரி. லெனின் அவர்களின் உற்ற சீடரான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் ஏகாதிபத்தியப் பொருளாதாரம் ஒவ்வொரு மணிநேரமும் கடுமையான நெருக்கடியில் உள்ளது என்று கூறினார். அந்த நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக அது பொருளுதாரத்தை ராணுவமயப்படுத்துகிறது. ஆனாலும் கூட அதன் நெருக்கடியிலிருந்து விடுபட அதனால் முடியவில்லை. ஒரு நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்காக அது மேற்கொள்ளும் நடவடிக்கை அதனை மற்றொரு நெருக்கடிக்குள் தள்ளிவிடுகிறது. எனவே அதன் பொருளாதாரம் மேலும் மேலும் போரை நோக்கிச் சாய்கிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடவேண்டும் என்ற தேவைதான் ஒவ்வொரு போர்களாக உருவாக்கவும், போரை உருவாக்க புதிய புதிய காரணங்களைத் தேடவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இட்டுச் சென்றுள்ளது. சரியாகச் சொன்னால் இன்று உலகில் நாம் இதைத் தான் கண்டுவருகிறோம். இத்தகைய நாட்டின் அரசாங்கத்தின் தலைவனாக இருந்துகொண்டு காட்டு மிராண்டித்தனத்தை செய்துவரும், ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அடிபணிந்து சேவகம் செய்துவரும் தலைவர்கள்தான் இந்த அமெரிக்க அதிபர்கள்.

### அமெரிக்க ஏகாதிபத்தியம் மனிதகுலத்தின் மிகப்பெரிய எதிரி

அணு ஆயுதங்கள் உள்ளிட்ட மிகக்கொடிய ஆயுதங்களைக் குவித்து வைத்துள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய கொள்ளைவெறி நலன்களுக்கு எதிராக இருக்கக்கூடிய அல்லது தனது வல்லாதிக்கத்திற்கு அடிபணிய மறுக்கும் நாடுகளை அச்சுறுத்தி ஊடுருவிவருகிறது. 'ஒத்துவா அல்லது அழிந்துபோ' என்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாரக மந்திரத்திற்கு லத்தீன் அமெரிக்கா, ஆசியா முதல் ஆப்பிரிக்கா வரை என உலகின் அனைத்து நாடுகளும் அச்சுறுத்தல் அபாயத்திலேயே இருந்துவருகின்றன. சுதந்திரமான இறையாண்மையுள்ள தங்களது விருப்பத்திற்கு மாறாகச் செயல்படும் நாடுகள் எல்லாம் 'எதிரி நாடுகள்' என்றும் அவர்கள் எதிர் விளைவைச் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும் என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றனர். உலகம் முழுவதின் மீதான கட்டுப்பாட்டை நிறுவ உலகப் போலீஸ்காரன் என்ற பாத்திரத்தை தமக்குத் தாமே கையிலெடுத்துக் கொண்டனர். காலனிகள் மற்றும் அரைக்–காலனிகள் மூலமாக நேரடியாகப் பொருளாதார மற்றும் அரசியல் சுரண்டலைத் தொடர்வது கடினம் என்பதை உணர்ந்ததால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் நவீன காலனியாதிக்கம் மூலமாக உலக நாடுகளை, குறிப்பாக புதிதாக எழுந்துவரும், ஆனால் சிறிய பலகீனமான தேசிய அரசுகளைச் சுரண்டத் தொடங்கினர். கொரியா போர், கிரீஸ்–சைப்ரஸ் விவகாரத்தில் தலையீடு, இந்தோ–சீனா, குறிப்பாக வியட்னாமில், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நடத்திய ரத்தம் தோய்ந்த போர் போன்றவற்றின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் போர்வெறி குணத்தை உலகம் கண்ணுற்றது. இன்னும் சொல்லப் போனால், வெறுப்பை–சம்பாதித்துள்ள சிஐஏ மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியங்களால் திட்டமிடப்பட்டு, அவர்களது ஆதரவோடு செயல்படுத்தப்படும் அரசியல் தலைவர்கள் படுகொலை, சதி, பிளாக் மெயில், தேர்தல்களில் பணபலம், ராணுவக் கிளர்ச்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட புகழ்பெற்ற அரசாங்களைக் கவிழ்த்துவிட்டு பொம்மை அரசாங்கங்களை நிறுவுதல், போன்ற சம்பவங்கள் எல்லாம் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன. இத்தகைய சம்பவங்களைப் பார்த்துதான் அமெரிக்காவை 'முன்னணித் தீவிரவாத அரசு' என்று நோஆம் சோம்ஸ்கி அழைத்தார். 1947 லிருந்தே 'யூகத்தின் அடிப்படையில் முன்கூட்டியே' அரசு தீவிரவாதத்தில் ஈடுபடுவதில் அமெரிக்கா தான் தலைவனாகவும் முன்னோடியாகவும் இருந்து வருகிறது' என்று பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறையின் புகழ்பெற்ற பேராசிரியர் அர்னோ மேயர் கூறினார்.

### அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மனிதகுல நாகரீகத்தை அழித்து வருகின்றனர்

1945இல் ஹிரோசிமா மற்றும் நாகசாகி நகரங்களில் முதன் முதலில் அணுகுண்டுகளை வீசி 2.66 லட்சம் மக்களைக் கொன்று அந்த இரு நகரங்களையும் அழித்தது அமெரிக்காதான். அந்தத் தாக்குதலில் உயிர்பிழைத்தவர்கள் அணுக் கதிர்வீச்சின் தாக்குதலுக்கு ஆளானதால் ரத்தப் புற்றுநோய் உள்ளிட்ட கொடிய மரணத்தை விளைவிக்கும் நோய்களுக்கு ஆளாயினர். பலர் நிரந்தரமாக ஊனமுற்றனர். குழந்தைகள் ஊனமாகவே பிறக்கின்றன. மரபியல் குறைபாடுகளுக்கான உதாரணமாக இன்னமும் அங்குள்ள மக்கள் இருக்கின்றனர். இப்படிக் கொத்தாக அழிப்பது ஒட்டுமொத்த உலகையும் உலுக்கியது. அதேபோல், வியட்னாமில், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 1964 முதல் 1975 வரையிலான 11 ஆண்டுகளில் நாசகார கொடிய நாப்பாஃம் குண்டுகளை வீசியும், கார்ப்பெட் அணுகுண்டுகளை வீசியும் 1.35 கோடி வியட்னாம் மக்களைக் கொன்றுகுவித்தனர். விவசாய நிலங்கள் உள்ளிட்ட வனப்பகுதிகள், பூங்காக்கள், மனிதர்களுக்கு உணவளிப்பவற்றை தீயிட்டு கொளுத்துவதற்காக

'ஏஜெண்ட் ஆரஞ்' இன்னும் இதுபோன்ற கொடிய நச்சு வாயுக்களை காற்றில் பரப்பினர். 'வியட்நாமில் நடைபெற்ற போர்க் குற்றங்கள்' என்ற தலைப்பில் மனிதநேயவாதி பெட்ரண்டு ரஸ்ஸல் புத்தகம் எழுதும் அளவிற்கு இந்தக் கொடிய தாக்குதல்கள் மிகவும் கொடூரமாக இருந்தது. கொரியப் போரிலும்கூட சோசலிச வடகொரியாவின் மீது கணக்கற்ற குண்டு வீச்சுக்களையும் 2500க்கும் மேற்பட்ட ராணுவத் தாக்குதல்களையும் நடத்தி 12 லட்சம் கொரியர்களைக் கொன்ற அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அதோடு நிற்காமல் பாக்டீரியா போரிலும் ஈடுபட்டனர். சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ரசாயன ஆயுதங்களையும் கொத்தாகக் கொலை செய்யும் மற்ற பேரழிவு ஆயுதங்களையும் பயன்படுத்தினர். நீர்நிலைகளில்

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஜெர்மன்–சமஸ்கிருத மொழி சர்ச்சை

# மாணவர்கள் நலனை காற்றில் பறக்கவிட்டு காவிப் படையினர் தூண்டும் சர்ச்சை

1ம் பக்கத் தொடர்ச்சி

1960களில் மத்திய அரசாங்கத்தின் இந்தித் திணிப்புக்கு எதிராக மாபெரும் வெகுஜன இயக்கங்கள் வெடித்தெழுந்தன இப்போராட்டங்களைத் தணிக்கும் நோக்கத்துடன் மூன்று மொழிக் கொள்கையை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது மாணவர்களுக்கு தாய்மொழி மூலமான கல்வி என்ற விரும்பத் தகுந்த வழிமுறையையும் காவு கொடுப்பதாக இருந்தது. மூன்று மொழிகளுக் கிடையே மாணவர்களின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கத்துடன் தற்காலத்தின் அறிவு மற்றும் அறிவாதாரஇயலின் பல்வேறு பிரிவுகளுடன் கூடிய முன்னேறிய அறிவுலகுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள உதவும் மொழியான ஆங்கிலத்தில் புலமைபெறுவதையும் குறைத்து மதிப்பிடுகிறது.

சுருங்கக்கூறின், இம்மொழிக் கொள்கையானது பள்ளிகளில் மொழிக் கற்பித்தலைப் பேரபாயத்திற்குள்ளாக்குகிறது. அடிப்படையாக இந்த கொள்கை தாங்கிநிற்பது: மாணவர்கள் மூன்று மொழிகளை படிக்கவேண்டும், முதல் மொழி (அது கட்டாயமொழி) தாய் மொழி அல்லது பிராந்திய /மாநில மொழியாக இருக்க வேண்டும். இரண்டாவது மொழி (விருப்பத்தேர்வுடன்): அ) இந்தி பேசும் மாநிலங்களில்: பிற நவீன இந்திய மொழி அல்லது ஆங்கிலம் ஆ) இந்தி பேசாத மாநிலங்களில்: இந்தி அல்லது ஆங்கிலம்: மூன்றாவது மொழி (மீண்டும் விருப்பத்தேர்வுடன்) இந்தி பேசும் மற்றும் இந்திபேசாத மாநிலங்களில்: ஆங்கிலம் அல்லது ஒரு நவீன இந்திய மொழி இரண்டாவது மொழியாகப் படிக்காத மாணவர்கள் அதைப் படிக்கவேண்டும். இந்த கொள்கை அல்லது திட்டம் புதிய தேசிய கல்விக்கொள்கை'1986ன்படி காங்கிரஸ் அரசாங்கத்தால் தொடரப்பட்டது.

1988ல் மும்மொழி திட்டத்தை கே.வி.க்கள் ஏற்றுக்கொண்டபிறகு துவக்கத்தில் பிராந்திய மொழிகள் அங்கு மூன்றாவது விருப்ப மொழியாக ஆக்கப்பட்டன. இருந்தபோதிலும், கட்டமைப்பு வசதிகள் இல்லை என்ற சாக்கில் இந்த முறையானது அமுல்படுத்தப்படவில்லை. அதாவது ஒவ்வொரு மாணவனின் தேவையையும் பூர்த்திசெய்யும் வகையில் ஆசிரியர்கள், வகுப்புக்கள், பிற வசதிகளை ஏற்பாடு செய்யமுடியவில்லை. பிஜேபி தலைமையிலான என்டிஏ அரசாங்கம் மத்தியில் அமைக்கப்பட்ட போது, காவிமயமாக்கல் அல்லது இந்துத்துவாவின் ஒரு திட்டவரைபடமான பள்ளிக் கல்விக்கான தேசிய பாடதிட்ட வரையறை' 2000 (NCF 2000)த்தின் மூலம் கல்வியை காவிமயமாக்கும் தனது திட்டத்தை திணிக்க முயற்சித்தது. உடனடியாக 2001ல் இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் எனும் மும்மொழிகளுக்கான உத்தரவை கேவிக்கள் பிறப்பித்தன. 15 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால், ஒரு கூடுதல் பாடமாக, ஒரு பிராந்திய மொழியை விருப்பத்தேர்வாக அனுமதித்து, இவ்வாறு இந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் என எந்த வேறுபாடுமின்றி இந்தி பேசாத மாணவர்களின் தாய்மொழி உட்பட நவீன இந்திய மொழியை கற்பிப்பதையும் கற்றலையும் முழுமையாக கைவிட்டது. 2005ல் காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ அரசாங்கம் பிஜேபி தலைமையிலான என்டிஏ அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக ஏற்றுக் கொண்டு நிறுவன மயப்படுத்திவிட்டது.

### தற்போதைய நெருக்கடி

2009வரை இந்தத் திட்ட அமைப்பு தொடரப் பட்டது. பிறகு சமஸ்கிருதத்தை கட்டாயப்படுத்தும் பிஜேபியின் முடிவிற்கு எதிர்ப்பு எழுந்ததைத் தொடர்ந்து, மூன்றாவது மொழியாக ஃபிரஞ்ச் அல்லது ஜெர்மன் என அந்நிய மொழியை கற்பிக்க காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ அரசாங்கம் முடிவுசெய்தது. 2011ல் (செப்.23) யுபிஏ II அரசாங்கத்தின்போது கேந்திரிய வித்யாலயா சங்கதனுக்கும் கோதே இன்ஸ்டிடியூட்டுக்கும் மேக்ஸ் முல்லர்பவனுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மூன்றாவது மொழியாக ஒரு இந்திய பிராந்திய மொழிக்கு பதிலாக ஜெர்மனுக்கு மாறிச் சென்றும் அக் கேவிக்களின் சமஸ்கிருத ஆசிரியர்களும் மற்ற துவக்கப் பள்ளி ஆசிரியர்களும் ஜெர்மனைக் கற்கவும் நேர்ந்தது. சுமார் 500 கேவிக்கள் ஜெர்மனை மூன்றாவது விருப்பப் பாடமாக வழங்கின.

இந்த உத்தரவிற்கெதிராக ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு திடீரென்ற முழுமையான தன்னிச்சையான ஒரு நடவடிக்கையின் மூலம் அக்.27, 2014 அன்று மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சரால் தலைமை தாங்கப்படும் கேவிக்களின் போர்டு ஆஃப் கவர்னர்ஸ் கூட்டத்தில் "சமஸ்கிருதத்திற்கு பதிலாக ஒரு விருப்பத்தேர்வாக ஜெர்மன் மொழிக் கற்பித்தலானது இனி நிறுத்தப்படும் என முடிவுசெய்யப்பட்டது. மும்மொழித் திட்டத்திற்கு விரோதமாக இருப்பதால் ஒரு மூன்றாவது மொழியாக சொல்லித்தரபடமாட்டாது, "மாணவர்கள் விரும்பினால் 6முதல் 8ம் வகுப்புவரை ஒரு பொழுதுபோக்கு வகுப்பாக ஒரு கூடுதல் பாடமாக ஜெர்மன் கற்பிக்கப் படலாம். ஆனால் மூன்றாவது மொழியாக அது வழங்கப்படுமானால் அது தேசிய கல்விக் கொள்கை/தேசிய பாடத்திட்ட வரையறை/ மும்மொழித்திட்டத்திற்கு விரோதமாக இருக்குமாதலால் அதை வழங்க இயலாது" என்பதால் 6முதல் 8ம் வகுப்புக்களில் சமஸ்கிருதம் மூன்றாவது மொழியாக இருக்கும் எனவும் கே.வி.க்களில் சமஸ்கிருதத்திற்கு மாற்றாக ஒரு மூன்றாவது மொழியாக இருக்கும் ஜெர்மன் கைவிடப்படும் எனவும் மத்திய அரசாங்கம் நவம்பர் 27 அன்று உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது.

மத்திய அரசாங்கம் மற்றும் கே.வி.க்களின் இம்முடிவானது கல்வியாண்டிற்கு மத்தியில் வந்ததால் மாணவர்களின் நலன் தூக்கியெறியப் பட்டது. சுமார் 500 கேவிக்களின் 70,000 மாணவர்களின் முழுஆண்டுத்தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. இது மக்களிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. கேந்திரிய வித்யாலயாக்களின் பள்ளிகளில் 6முதல் 8ம் வரையில் ஜெர்மனுக்கு பதிலாக சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாகப் படிக்கவேண்டிய ஒன்றாகவே பெற்றோர்கள் கருதினர். மக்கள் அபிப்பிராயம் மற்றும் கேவிக்களின் மாணவர்களின் பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் காரணமாக உச்சநீதிமன்றம் தலையிட்டதால் இம்முடிவை இவ்வாண்டிற்கு பதிலாக அடுத்த கல்வியாண்டிலிருந்து அமுல்படுத்தவேண்டிய கட்டாயத்திற்கு மத்திய அரசாங்கம் உள்ளானது.

### இத்திட்டத்தின் பின்னணியில் உள்ள உண்மை

இத்திட்டத்தை பாதுகாக்கும்பொருட்டு இம்முடிவு கீழ்மட்டம் அல்லது துவக்க மட்டத்திலுள்ள மாணவர்களான 6முதல் 8ம் வகுப்புவரை மட்டுமே, உயர்வகுப்பு அல்லது மேல்வகுப்புகளுக்கு அல்ல என்பதை மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதனுடன், கேவிக்களில் ஜெர்மன் தடை செய்யப்படவில்லை. இது வெறும் ஒரு அதிகாரப் பூர்வ மூன்றாவது மொழியாக தொடர்வது மட்டுமே இருக்காது, இதன்போக்கில் ஜெர்மனுக்கு உரிய அந்தஸ்த்தும் மரியாதையும் தரப்படும் என ஜெர்மனி தூதுவர் ஹெர்ஸ்டீய்னர் மற்றும் ஜெர்மன் சான்சலர் ஏஞ்சலா மெர்க்கல் ஆகியோரிடம் உறுதியளிக்கப் பட்டிருக்கிறது. எழும் பிரச்சினைகளை உணர்ந்து கொண்டும், எதிர்க்கட்சிகள் தந்த அழுத்தத்தின் காரணமாகவும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் மூன்றாவது மொழித் தேர்வு விஷயத்தில் அரசின் முந்தைய முடிவுகளை நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதை சாக்காகக் கொண்டு கடுமையாக நடந்து கொள்ளாதிருக்கும்படி கேந்திர வித்யாலயா வின் போர்டுக்கு கட்டளை யிட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. பாதிக்கப்படும் மாணவர்களுக்கு தகுந்த ஆலோசனை அளிக்கப்பட்டு சமஸ்கிருதத்திற்கு பதிலாக ஏதேனு மொரு இந்திய மொழியை தேர்வுசெய்து கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கேவிக்களாலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தாலும் வழங்கப்பட்ட மூன்றாவது மொழிக்கான தேர்வாக ஜெர்மன் கட்டாயமாக்கப்படவில்லை என இந்த திட்டத்தை எதிர்ப்பவர்கள் வாதிடுகிறார்கள். ஆயினும், கேவியின் 500 பள்ளிகளில் ஜெர்மன் மொழியைத் தேர்வு செய்த 70,000 மாணவர்கள் மத்தியில் மொழிப்பாடத் தேர்வு குறித்து ஏராளமன சர்ச்சைகள் எழுந்துள்ளதோடு, சமஸ்கிருதத்தைத் தவிர்த்து ஒரு அன்னிய மொழியைக் கற்றுக் கொள்வது தங்களின் எதிர்கால முன்னேற்றத் திற்கு துணைசெய்யும் என்றும் கருதுகிறார்கள். ஆனால் தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு உரிய ஆலோசனை மற்றும் நிவாரணம் வழங்குவதாகப் பேசுவது சமஸ்கிருதத்தை வளர்ப்பது என்ற குறிக்கோள் வெற்றுவார்த்தை என்பதைப் போலவும் எப்படியேனும் சமஸ்கிருதத்தை அறிமுகப் படுத்தவேண்டும் என்பதே நோக்கம் என்பது போலவே தோற்றமளிக்கிறது. ஆனால், ஜெர்மன் மொழியைக் கைவிட நிர்ப்பந்தப் படுத்தப்படும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

## ஓபாமா வருகையை எதிர்த்து இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கம்




25.1.2015, தேனி




24.1.2015 மதுரை




24.1.2015 சென்னை

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), சிபிஐ, சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்) நான்கு இடது சாரிக் கட்சிகள் தமிழ்நாடு முழுவதும் ஓபாமா வருகையை எதிர்த்து போராட்டங்ளை நடத்தியது. புதுக்கோட்டை, சேலம் மாவட்டத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

## ஜெர்மன்–சமஸ்கிருத மொழி சர்ச்சை

# உயர்ந்த அறிவைப் பெறுவது, கருத்துப் பரிமாற்றம் மற்றும் தொழிற் பயன்பாடு ஆகியவை மொழி கற்பித்தலைத் தீர்மானிக்கிறது

3ம் பக்கத் தொடர்ச்சி

ஆநேக மாணவர்கள் எப்படியும் சமஸ்கிருதத்தையே தேர்வு செய்வார்கள். இந்தக் ஆதாயக் கணக்கைத்தான் கேந்திரிய வித்யாலயாவும், சங்கேதனும் மனித வளத்துறையும் போட்டுக் கொண்டிருக்கிறது. எந்த நவீன இந்திய மொழியையும் தங்களுடைய மூன்றாவது மொழியாக மாணவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என அமைச்சகம் வாக்குறுதி கொடுத்திருக்கலாம். ஆனால், அமைச்சரின் வாக்குறுதிப்படி ஒவ்வொரு மாணவனின் தேவையையும் பூர்த்தி செய்ய ஆசிரியர் மற்றும் பிற கட்டமைப்புக்கான ஏற்பாடு செய்வதென்பது நடப்பிலுள்ள சூழ்நிலையில் நிச்சயமாக ஒரு பெரும் சவால் நிறைந்ததாகும். எனவே மூன்றாவது மொழியாக எந்தவொரு நவீன இந்திய மொழியையும் விருப்பத்தேர்வாக எடுத்துக் கொள்ளலாம் எனும் வாக்குறுதி வாக்குறுதியாகவே இருக்கும். அடுத்த கல்வியாண்டில் 6ம் வகுப்பிற்குள் நுழையும் பிரிவானது இந்தியும் ஆங்கிலமும் தவிர சமஸ்கிருதத்தையும் கற்க நேரிடும். மேலும் இவ்வழியாக ஒருமுறை அறிமுகப்படுத்தப்பட்டு விட்டால் இது நன்கு பயன்பாட்டிற்கு வந்துவிட்டது என்றும் இனிவரும் பிரிவினரும் இப்படியே பின்தொடரலாம், மற்ற கல்வி வாரியங்களிலும் இம்முறையை நீடிக்கச் செய்யலாம் என்பதும் ஸ்தாபிக்கப் பட்டுவிடும்.

### மொழிக் கற்பித்தலின் முக்கியத்துவம்

ஆனால் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் மேலே மிகுந்த முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினைகள் இருக்கின்றன. சிந்தனை மற்றும் அறிவின் வாகனமாக மொழி இருப்பதால் பள்ளி மட்டத்தில் கற்பிக்கும் மொழி குறித்த கொள்கையானது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. இது ஏதோ சில பிரிவைச் சார்ந்த சில மாணவர்கள் குறித்த ஒரு பிரச்சினையல்ல. ஒட்டுமொத்த தேசத்திற்கான கொள்கை குறித்த விஷயமாதலால் மிகுந்த கவனமும் அக்கறையும் கொள்ளவேண்டிய பிரச்சினையாகும். மிகச் சரியாக சொல்வதானால், முறையான மொழிக்கற்பித்தலும் பள்ளி மட்டத்தில் கட்டாயம் சொல்லித்தரவேண்டிய மொழி அல்லது மொழிகளைத் தெரிவுசெய்வதானது மூன்று விஷயங்களால் வழிநடத்தப் படுகிறது.

முதலாவதாக, காலத்திற்கேற்ப மிக உயர்ந்த முன்னேறிய அறிவிற்கான ஒரு நுழைவுவாயிலாக மொழி இருக்கவேண்டும். விஞ்ஞானம், இலக்கியம், சமூக விஞ்ஞானங்கள் அதேபோல பயன்பாட்டு அறிவியல் (Applied Science) அல்லது உயர்ந்த தொழில்நுட்பம், முன்னேறிய சிந்தனைகள் மற்றும் அறிவை உயர்ந்த மட்டத்தில் பரிமாறிக்கொள்ளுதல், வெளிப்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட நவீனப் பாடங்களை கற்பதன் மூலம் மட்டுமே அதுபோன்ற அறிவை பெறமுடியும்.

இரண்டாவதாக, தனிப்பட்ட மற்றும் மக்கட் தொகையின் பல்வேறுபட்ட பிரிவுகளின் சமூக வாழ்வின் அனைத்து மட்டங்களிலும் சிந்தனைகளின் தொடர்பு மற்றும் வெளிப்படுத்தல்களின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்கு வசதியாக மொழி இருக்கவேண்டும். குறிப்பாக, பல்வேறுபட்ட தேசிய மொழிகளை பேசக்கூடிய மக்களின் பல்வேறு குழுக்கள் வாழக்கூடிய இந்தியா போன்ற ஒரு நாட்டில் இது மிகவும் முக்கியமாகும். மூன்றாவதாக, அப்படிப்பட்ட மொழியில் தேர்ச்சியோடிருப்பது சமகாலத்தில் நல்ல பயன்தரத்தக்க மதிப்பைக் கொண்டிருக்கிறது. இது ஒரு மாணவருக்கு அவரது தொழில்முறை வாழ்க்கையில் ஒரு கருவியாக செயல்பட்டு நல்ல பலனையும் வாழ்வாதாரத்தையும் தரக்கூடியதாயிருக்கிறது.

இந்த மூன்று அவசியங்களையும் நிறைவு செய்வதற்கு தாய்மொழியில் தேர்ச்சி அவசியம், ஆகவே அமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணையைக் கருத்தில் கொண்டு கல்வியில் உயர்தரத்தை நிலைநிறுத்தும் வகையில் தாய் மொழிக் கல்விபோதனை வழங்கப்பட வேண்டும். அதோடு கூடவே, அதற்கு இணையாக சமமான முக்கியத்துவத்துடன் ஆங்கிலமும் கற்பிக்கப் படவேண்டும். இது ஏனெனில், உயர்ந்த அறிவை பெறவும் பன்மொழிகளைக் கொண்ட நமது நாட்டிற்குள்ளும் நெருங்கியும் சுருங்கியும்விட்ட இன்றைய உலகத்துடன் சர்வதேசிய அளவிலும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு கருவியாக இன்னமும் ஆங்கில மொழி திகழ்வதால் ஆகும். பள்ளி மட்டத்தில் ஒரு மாணவனை சரியாக வளர்த்தெடுக்க இவை இரண்டின் தேவையும் போதுமானதாகும்.

பிற எந்த மொழியையும் கற்றுக் கொள்ளவிரும்பும் ஒரு மாணவன் அதை பிராந்திய மொழிகளிலிருந்துதோ அல்லது சமஸ்கிருதமோ அல்லது பொருத்தமான அந்நிய மொழியிலிருந்தோ தேர்ந்தெடுத்துக்கொள்ளும் சுதந்திரம் இருக்க வேண்டும். (8வது அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறது)

### ஒரு மொழி என்ற அடிப்படையில் சமஸ்கிருதம்

தொன்மைமிக்கதொரு மொழியான சமஸ்கிருதம் செழுமைமிக்க நமது பாரம்பரியத்தின் பங்கும் பகுதியுமாகும். ஆனால் ஒரு கட்டாய மொழிப்பாடமாக சமஸ்கிருதத்தை கற்பிப்பது–கற்பது குறித்த விருப்பமானது காரணம் மற்றும் ஒருதலைசாராத வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கவேண்டும். மரபு என்பதையெல்லாம் வைத்து அதன் தேவை தீர்மானிக்கப்படமுடியாது. மரபுகுறித்த விஷயமெல்லாம் தற்காலத்தில் மனித சமுதாயத்திற்கு பயனுடையதாக இருக்கிறதா என்பதை வைத்தே தீர்மானிக்கப்படும். மனிதனின் மரபானது மனிதனைவிடவும் உயர்வானது அல்ல. நாம் இதை மறந்தால் அல்லது எப்பொழுது மறக்கிறோமோ அப்பொழுது மனிதனையும் அவனது மரபையும் ஒருசேர இழந்துவிடுவோம். விருப்பம் அல்லது வெறுப்பைக்கொண்டு சமஸ்கிருத மொழியை சீர்தூக்கிப் பார்க்க முடியாது. எந்தவொரு மொழியிலும் தகுதியுடைமை என்பது எப்போதும் விரும்பத்தக்கது என்பது உண்மைதான். பண்டைய வரலாறு அல்லது இலக்கியத்தில் ஆர்வங்கொண்டு ஆராய்ச்சி உட்பட உயர்மட்டத்தில் இந்த பண்டைய மொழி குறித்து ஆய்வுசெய்ய வசதி வாய்ப்புக்களை எந்த மாணவனும் பெறவேண்டும்.

உண்மையில், மனித வரலாற்றில் பல மொழிகள் செம்மொழியாக (Classical) கருதப்படுகின்றன. அவற்றில் பல, அவை வளர்ந்துவந்த காலகட்டத்தில் மனிதஅறிவு மற்றும் நாகரீகத்தின் முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கையும் வகித்திருக்கின்றன. ஆனால், அப்பொழுதிலிருந்தே அதன் வரலாற்று ரீதியிலான பாத்திரம் முடிந்துவிட்டபோது புதிய மொழிகளுக்கு வழிவிடுகிறது. அப்புதிய மொழிகள்கூட அப்பண்டைய மொழிகளிலிருந்து தோன்றியிருக்கக் கூடும். அதே முறையில், பண்டைய கலாச்சாரம், கலை, இலக்கியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகியனவெல்லாம் பிந்தைய நாட்களில் அதன் புதியவற்றால் இடமாற்றம் செய்யப்படுகின்றன. இன்று மக்கள், மனித நாகரீகத்தின் நவீன கட்டத்தில், மனித நாகரீகத்தின் புதிய அத்தியாயத்தை துவக்க கடமைபட்டுள்ள அவர்கள் அவற்றையெல்லாம் எச்சரிக்கையுடனும் முழுவதுமாகவும், விஞ்ஞான பூர்வ வழிமுறையில் ஆய்வுசெய்கின்றனர். பண்டைய காலத்தின் இந்தப் பங்களிப்புகளை பண்டைய காலம்குறித்த பாடங்களாக மட்டுமே தற்போது நாம் எடுத்துக்கொள்ளமுடியும். இவ்வாறு கூறுவதால் அந்தமொழி, கலாச்சாரம் அல்லது அவ்வகைப்பட்டவைகளைக் குறைத்து மதிப்பிடுவதாக ஆகாது. மாறாக, அப்படிப்பட்ட ஆய்வுகளெல்லாம் மனித நாகரீகத்தில் அவை ஆற்றிய பங்கை மிகச்சரியாக வெளிக்கொணரவே உதவும். இவ்வளவீடுகளின்படி அக்காலத்தில் அடையமுடிந்த, மிகச்சிறந்தவழியில் அதன் காலத்திற்குரிய மிகுந்த முன்னேறிய சிந்தனைகள் மற்றும் அறிவின் வெளிப்படுத்திய செறிவுமிகுந்த பங்களிப்புகளுக்கு உரியதாகவே சமஸ்கிருதம் மதிப்பிடப்படவேண்டும். இந்த கண்ணோட்டத்தில் தான் நமது செழுமைமிக்க பாரம்பரியங்களில் ஒன்றாக இதை ஆய்வுசெய்யமுடியும்.

அதேசமயம், முன்சொல்லப்பட்ட மூன்று அம்சங்களில் சமஸ்கிருதம் தோல்வியுறுவதை மறுக்கமுடியாது. சமஸ்கிருதம் (செம்மைப்பட்ட) போதனா மொழியாக இருந்து செம்மொழியாகவும், பூஜிக்கும் மொழியாகவும் உயர்ந்து பண்டிதர்களின் இலக்கிய மொழியாகவும், உயர்ந்து இலக்கணம், விஞ்ஞானம், மதம் மற்றும் தத்துவம் ஆகிவை எழுதப்பட்டுள்ளன. அன்றாடம் மக்கள் பேசும் மொழி பிராகிருதமாகும் (பொதுமக்கள் மொழி, இயற்கை மொழி என்ற பொருள் படும்).சமஸ்கிருதம் படித்த–செல்வம்மிகுந்த வர்க்கத்தினருக்குரி யதாகவும் உயர்ஜாதியினர் என்று அழைக்கப்படுவோருக்கு அதாவது பிராமணர்களுக்கும் சேவைசெய்தது. கீழ் சாதி என்று அழைக்கப்படும் மக்களுக்கு சமஸ்கிருதத்தில் கல்வி மறுக்கப்பட்டது. இது இவ்வாறு உயர் ஜாதி பிரிவினருக்கு குறிப்பாக பிராமணர்களுக்கு சேவை செய்தது. உண்மையில் இந்த மண்ணின் மக்களுடைய மொழியாக சமஸ்கிருதம் ஒருபோதும் இருக்கவில்லை. மாபெரும் வேதாந்தியான விவேகானந்தரின் வார்த்தைகளில் "நமது நாட்டில் தொன்மைக் காலத்திலிருந்து சமஸ்கிருதத்தில் கற்றறிந்த நபர்கள் இருந்து வந்ததன் காரணமாக, கற்றறிந்தவர்களுக்கும் சாமானிய மனிதனுக்குமிடையே அளவிட முடியாத ஒரு இடைவெளி இருந்துவந்திருக்கிறது" (தொகுப்பு நூல் தொகுதி 6).

சமஸ்கிருதம் தனது நிலையை இழந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு காரணம் அது படிப்படியாகக் குறைந்துகொண்டே சென்று மிகமிகக் குறுகிய மக்கட்பிரிவினருடனும் பண்டிதர்களின் குறைந்தபட்ச பயன்பாட்டு மொழியாகவும் உபயோகத்திலிருந்ததுமேயாகும். போதாக்குறைக்கு உயர்ஜாதி அல்லது மதபோதகர்களுடைய மொழியாக புழக்கத்திலிருந்த சமஸ்கிருதத்தின் எதிர்வினையாக பக்தி இயக்கத்தை வழிநடத்திய கவித்துறவிகள் கபீர், துளசிதாஸ் ஆகியோர் தோன்றினர். கூடுதலாக அப்போதைய இந்துயிசத்தின் சடங்குகள் மற்றும் ஜாதி அமைப்பிற்கு எதிராகவும் இவ்வியக்கத்தைச் செலுத்தினர். கபீர் தனது டோஹேவை பிராஜ் மொழியிலும் துளசிதாஸ் பிராஜ் மற்றும் அவாதியிலும் துக்காராமும் நாம்தேவ்வும் மராத்தியிலும் குருநானக் குர்முகியிலும் எழுதினர். சமஸ்கிருதம் தனக்குரிய இடத்தை இழந்துகொண்டிருப்பதற்கு எதிரிடையாக வரிவடிவங்களே இல்லாதபோதிலும் பல்வேறு பழங்குடி மொழிகள்கூட தொடர்புக்கான ஒரு கருவியாக வெற்றிகரமாக பிழைத்திருந்தது. தற்பொழுது நாட்டின் அல்லது உலகத்தின் எந்தப்பகுதியிலும் எந்த மக்களின் தொடர்பு மொழியாகவும் சமஸ்கிருதம் எவ்விதத்திலும் இல்லை.

இரண்டாவதாக, சில நிபுணர்கள் வாதிடுவது போல், பல போற்றத்தக்க மொழியியல், கவித்துவ, கணிதவியல் விஷயங்களெல்லாம் இந்தியாவின் பண்டைய காலத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன என்பது உண்மைதான். ஆனால் அவர்களுடைய காலத்தில் அவர்கள் வெளிப்படுத்திய சிந்தனைகளும் அறிவும் அப்போதைய நிலப்பிரபுத்துவ சமுதாயத்திற்குரியவை. அதனுடைய நேர்த்தியான இலக்கணம், கவிதைக்கான அதன் திறன், ஒரே பொருளைத் தரும் பல வார்த்தைகள் மற்றும் உருவகப் படுத்துதல் போன்றவற்றையெல்லாம் சமஸ்கிருதம் ஒரு பொருத்தமான ஊடகமாக, சமூக விஞ்ஞானம் அல்லது தத்துவம் உட்பட விஞ்ஞானம் போன்ற நவீன பாடங்களின் சமகாலத்திய அறிவை ஆகர்ஷித்துக் கொள்ளும் வாகனமாக திகழமுடிய வில்லை. இவ்வாறு சமஸ்கிருதத்தின் செறிவுமிக்க பங்களிப்புக்கள் அதன் பரிணா மத்தின் மீதான ஆராய்ச்சிக்கு உதவும். தற்காலத்திய பொருளுற்பத்தி, அறிவுற்பத்திக்கு எவ்வகையிலும் அது உதவாது. சமஸ்கிருதத்தில் புலமைபெறுவது பரந்துபட்ட, பல்வகைப்பட்ட இன்றைய வேலைச் சந்தையில் மாணவர்களுக்கு எவ்விதப்பயனையும் அளிக்கப்போவதில்லை.

சமஸ்கிருதம் கிரேக்கத்தைவிட சிறப்பானது, லத்தீனைவிட வளமானது, வேறெதைக்காட்டிலும்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## ஜெர்மன்–சமஸ்கிருத மொழி சர்ச்சை

# கல்விமீதான காவிப்படையின் அபாயம் மிகுந்த தாக்குதலை எதிர்ப்பீர்

4ம் பக்கத் தொடர்ச்சி

மிக நேர்த்தியானது என்றெல்லாம் பெருமை பேசுவது உண்மையே. "இடம் பொருள் என்ற வரையறையிலிருந்து விடுபட்ட" வடிவரீதியாக மிக நேர்த்தியான கட்டமைப்புக் கொண்ட உலக மொழிகளில் சிறந்தது என்றும் சொல்லத்தகுந்த மொழியான இது, சமஸ்கிருத அறிஞர் பாணினியின் குறிப்பின்படி கிட்டத்தட்ட 3959 விதிகளை உள்ளடக்கியது. மொழியியல் மற்றும் ஒலியியலில் உலகின் ஆரம்பப் பணிகளில் ஒன்றான மிகுந்த விரிவான மற்றும் தர்க்க ரீதியிலான இலக்கணத்துடன் அநேக நவீன மொழியியலுக்கான அடித்தளத்தை இட்டவை களாக பாணினியின் நூல்கள் கருதப்படுகின்றன. பள்ளிகளில் ஒருசில வருடங்கள் சமஸ்கிரு தத்தைப் படிப்பது மாணவர்களுக்கு நல்ல மதிப் பெண்களைப் பெற்றுத் தரலாம். ஆனால் எல்லையற்ற சமஸ்கிருத மொழியின் இலக் கணத்தின் ஒருசிறு பகுதியைக்கூட அதனால் மாணவர்களுக்கு தரமுடியாது. எனவே இதுவன்றி அதன் இலக்கியத்தின் செழுமையை போற்றுவதென்பது சாத்தியமல்ல.

இவ்விஷயத்தில் மிகச்சிறந்த சமஸ்கிருத அறிஞர்களான ராம்மோகன்ராய் மற்றும் ஈஸ்வர்சந்தர் வித்யாசாகர் போன்றவர்கள் மிகச்சரியாக தெளிவான கருத்துக்களை விட்டுச் சென்றுள்ளபோதிலும் கேள்விகளை எழுப்பு வதென்பது உண்மையில் துரதிருஷ்ட வசமான தாகும். கிட்டத்தட்ட இருநூறு வருடங்களுக்கு முன்பு (டிசம்பர் 1823) அம்ஹெர்ஸ் பிரபுவுக்கு ராம்மோகன் எழுதும்பொழுது தெளிவாக குறிப்பிடுகிறார் "......இந்து பண்டிதரின்கீழ் ஒரு சமஸ்கிருத பள்ளி..... இந்த செமினரி (பேகன் பிரபுவின் காலத்திற்கு முன்பு ஐரோப்பாவில் நிலவியதைப் போலுள்ள) இலக்கண சுவையையும் மெட்டாபிசிக்ஸின் (Meta Physics) தனித்து வத்தையும் மாணவர்களின் தலையில் ஏற்றலாம். ஆனால் அவனுக்கு அல்லது சமுதாயத்திற்கு அதனால் விளையப்போகும் நன்மைதான் என்ன?

இதன்மூலம் மாணவர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு என்ன அறியப்பட்டிருந்ததோ அதனையே பயனற்ற முறையில் கூடுதலாக பொருளற்ற விஷயங்களாக அறிந்துகொள்வர் ஏனெனில் அவை கற்பனைத்திறன் கொண்ட மனிதர்களால் உருவாக்கப்பட்டவையாகும். இவைபோன்ற வைதான் ஏற்கனவே பரவலாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் போதிக்கப்பட்டு வருகின்றன."

"சமஸ்கிருதத்தில் புலமை பெறுவதற்கு வாழ்நாள் போதாது அந்த அளவிற்கு அது கடினமான மொழி, ஆகவேதான் அறிவு பரவுதலில் இது முட்டுக்கட்டையாக இருந்து வருவதுடன். கற்றுக் கொள்வதிலும் கூட இது கிட்டத்தட்ட அகற்றமுடியாத தடையாகவும் இருந்துவருகிறது"

அக்காலத்தின் மற்றொரு முதுபெரும் சமஸ்கிருத அறிஞரும் கல்கத்தா சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வருமாகிய வித்யாசாகர் அப்போதைய கல்விக் கவுன்சிலின் செயலாளராக இருந்த டாக்டர் மௌயாட்டுக்கு தனது திட்டத்தை (அக்டோபர் 1853) மிகவும் தெளிவாக விளக்கும் விதமாக எழுதிய கடிதத்தில் "சமஸ்கிருதத்தை ஆங்கிலத்தைப் போதானா மொழியாகக் கொண்டு கற்றுக் கொடுக்கும் போக்கில் அம்மொழிபற்றிய மேம்பட்ட அறிவைப் பெறுவதற்கும் அம்மொழியின் வட்டார வழக்கு பற்றி கற்றுத்தேர்வதற்கும் என்னை சமஸ்கிருத மொழியை போதிக்கவிடுங்கள். மேலும் இதற்கு முன்பு நான் உங்களுக்கு உறுதி கொடுத்த சில ஆண்டுகள் முடியும் முன்னதாகவே.......தங்களின் எழுத்துக்கள் வழியாகவும் , போதனைகளின் வழியாகவும் மக்களிடத்தில் மிக மேம்பட்ட தகவல்களை பரப்புவதற்குத் தகுதிவாய்ந்த இளையவர்களைக் கொண்ட ஒரு குழுவினரை நான் உங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்" மேலும் அவ்வாறான சமஸ்கிருத்த மொழி போதனைக்கு வழிவகுக்கும்விதமாக அவரே மாணவர்கள் சுலபமாகக் கற்றுக் கொள்ள ஏதுவாகின்ற வகையில் சமஸ்கிருத இலக்கண நூல்களை எழுதினார். மேலும் சமஸ்கிருதக் கல்லூரியின் பாடத்திட்டத்தை அவர் வடிவமைத்த பொழுது "கணிதத்தை சமஸ்கிருத மொழியில் பயில்வது கைவிடப்படவேண்டும். அதற்குப் பதிலாக நான் ஆங்கிலத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனெனில் ஒரு புத்திசாலி மாணவன் தற்போது சமஸ்கிருத மொழியின் வழியாக கணிதப் பாடத்தின் அனைத்தையும் மிகச் சரியான வகையில் அறிந்து கொள்வதற்கு அவன் எடுத்துக் கொள்ளும் காலத்தில் பாதி நேரத்தில் இதைவிட இருமடங்கு மேம்பட்ட தகவல்களை ஆங்கில மொழியின் வழியாக கணிதத்தை பயிலும்போது கைவரப்பெறமுடியும்" (1852 சமஸ்கிருதக் கல்லூரியின் குறிப்பு).

விவேகானந்தரும்கூட இது விஷயமாக மிகத் தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார். "சமஸ்கிருத மொழி மிகவும் நுட்பமானது, வேதத்தில் இம் மொழி மிகவும் பழமைவாய்ந்தது, சமஸ்கிருத மொழி மற்றும் இலக்கியம் மிகவும் நேர்த்தியானது. அதாவது ஒரு வார்த்தையின் பொருளைப் புரிந்துகொள்வதற்கு பல சகாப்தங்கள் விவாதத்தை தொடர்ந்து கொண்டிருக்கலாம்." (தொகுப்பு நூல் தொகுதி 3).

எந்த ஒரு காலகட்டத்திலும் சமுதாயத்தின், வாழ்க்கையின் தேவைகளின் பொருட்டாக, மக்கள் தங்களுக்கிடையேயும் மற்றவர்களுடனும் தொடர்பு கொள்வதற்கான, சிந்தனை மற்றும் அறிவின் வாகனமாக மனித வரலாற்றில் மொழி தோன்றியது. அதன் வளர்ச்சிப்போக்கில் கருத்துப்பரிமாற்ற வாகனம் மற்றும் தொடர் பிற்கான கருவி என்ற நிலையில் மொழி பிற மொழிகளுடன் அது தொடர்பாடலுக்கு வருகிறது. உண்மையில் உயிர்ப்புள்ள, ஆற்றல் மிகுந்த, ஆக்கப்பூர்வமான ஒரு மொழியானது வாழ்க்கை, அறிவு மற்றும் அறிவாதாரவியலின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் மேன்மேலும் நெகிழ்வுத் தன்மைபெறுவதுடன் புதிய புதிய சாராம்சங்களையும், வளர்ச்சிக் கூறுகளையும், வெளிப்பாடுகளையும் பிற மொழிகளிலிருந்தும் உள்வாங்கிக் கொள்கிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக ஒரு மொழி வரலாற்றுக் காரணங்களால் பெரும்பான்மை யான மக்களிடையே தொடர்பிற்கான தேர்ந்த கருவியாகச் செயலாற்றவியலாமல் நின்று போகிறது. மேலும் இவ்வாறாக அது மேன்மேலும் உயர்ந்த அளவிற்கான நெகிழ்வுத் தன்மையையும், உள்வாங்கி ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் கொண்டிருப்பதில் தனக்குத்தானே தடை யேற்படுத்திக் கொண்டு முடங்கிப்போய் இறுதியில் வழக்கொழிந்து போகிறது. பல்வேறு நவீன மொழிகளின் தோற்றத்திற்கு வழியமைத்த மிக வளமையான செம்மொழிகளும் கூட இதற்கு நல்ல உதாரணமாகத் திகழ்கின்றன (உதாரணத் திற்கு லத்தின்).

நவீன வாழ்க்கை மற்றும் நாகரீகத்தின் வளர்ச்சியுடன் மனிதகுலத்தின் அறிவு மற்றும் அனுபவங்கள் பலமுனைகளிலும் விசாலமடைந்து வாழ்க்கையின் புதிய புதிய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் கேள்விகளும் தீர்க்கப் படுகின்றன. மனிதகுலம் தங்குதடையின்றி புதிய புதிய சந்தர்ப்ப சூழ்நிலைமைகளை நேருக்கு நேர் சந்தித்துவருகிறது என்ற விஷயம் உலகம் தழுவி ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். நவீன மொழிகள் தொடர்ந்து உயிர்பிழைத்திருக்க வேண்டுமெனில் இவ்வாறான சந்தர்ப்பநிலைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு அவற்றை உள்ளிணைத்துக் கொள்ளவேண்டும். சந்தர்ப்பவரையறைக்குக் கட்டுப்படாத சில முடிவான சட்டதிட்டங்களால் வடிவமைக்கப்படுகின்ற இலக்கணம் யதார்த்த த்தில் மொழியைச் சிறைப்படுத்தி வைப்பதுடன் மொழியை மேன்மேலும் சிறந்த ஒன்றாக மாற்றுவதற்குப் பதிலாகப் படிப்படியாக சம காலத்திற்கு உயிர்ப்பற்ற ஒன்றாகவும் மாற்றி விடுகிறது. மீண்டும் சமஸ்கிருதம் இவ்விஷயத்தில் காலம் மற்றும் காலத்தின் தேவைகள் என்ற சோதனையின் முன்பு தோற்றுப்போகிறது.

ராம்மோகன், வித்யாசாகர் போன்றவர்கள் அவர்கள் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஸ்கிருத வல்லுனர்களாக இருந்தபோதிலும்கூட சமஸ்கிருதக் கல்வி நவீன உலகத்தை முன் னோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக வேத–வேதாந்த காலத்தின் பழமையை நோக்கிப் பின் செலுத்து கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் 21ஆம் நூற்றாண்டில் இன்று, இந்த பிஜேபி ஆர்எஸ்எஸ் கூட்டணி 'வேத சமஸ் கிருதத்தின்' பழம்பெருமைகளை மீட்டெடுப்பது இத்தருணத்தின் மாபெரும் கேள்வி என்பதைப் போல் முழுமூச்சாக இறங்கியிருக்கிறது. 19ம் நூற் றாண்டின் ராம்மோகன்ராய் "நாம் நிகழ்காலத்தில் பார்க்கிற புலன்களால் உணரப்படுகின் அனைத் தும் அதாவது தந்தை, சகோதரன் மற்றும் பிற உறவுகள் உண்மையில் அவ்வாறு இருக்கவில்லை, என்று போதிக்கின்ற வேதாந்தக் கோட்பாடு களால் உருவாக்கப்படுகிற்ற எந்த இளைய வயதினரும் சமுதாயத்திற்குப் பொருத்தமான தலைசிறந்த உறுப்பினர்களாக விளங்கமுடியாது, அதாவது இக்கருத்துக்கள் முழுமைபெற்ற கருத்துக்கள் அல்ல, இதனால் இளைஞர்கள் ஒரு உண்மையான பந்த உணர்வைக் கொண்டிருப் பதில்லை, மேலும் அவர்கள் விரைவில் அவர்களிடமிருந்து விலகி இவ்வுலக வாழ்க்கை யிலிருந்து விடுபட எண்ணுகிறார்கள்... சமஸ்கிருதக் கல்விமுறை இந்த நாட்டை இருட்டில் வைத்திருக்க செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட ஒன்றாகும்." என்று கருதினார். நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் தாராளமான மேம்படுத்தப்பட்ட கல்விபோதானா முறையைக் கொண்டுவர அரசாங்கத்தை வலியுறுத்திய அவரின் ஆலோசனையில் (டிசம்பர் 1823)

தொடர்ச்சி 6ம் பக்கம்

# ஜனவரி 23 – நேதாஜி பிறந்ததினம் அனுஷ்டிப்பு



வியாசர்பாடி, சென்னை



வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம்




காமக்காபட்டி, வத்தலகுண்டு

மதுரை, தேனி, நெய்வேலி, புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் ஆகிய இடங்களில் நேதாஜி பிறந்ததினம் அனுஷ்டிக்கப்பட்டது

# ஜெர்மன் மொழிக்குப் பதிலாக சமஸ்கிருதம்...

5ம் பக்கத் தொடர்ச்சி

"கணிதம், இயற்கைத் தத்துவம், வேதியல் மற்றும் உடற்கூறியல் இவற்றுடன் பிற பயன்தரத்தக்க விஞ்ஞானப்பாடங்களை......" முன்வைத்தார். அதன்பின்பு பல பத்தாண்டுகளுக்குப்பின்பு (செப்டம்பர் 1853இல்) டாக்டர் மௌயாட்டுக்கு வித்யாசாகர் எழுதிய கடிதத்தில் கூட "சில காரணங்களுக்காக ..... நாம் சமஸ்கிருதக் கல்லூரியில் வேதாந்தா, சாக்கியம் ஆகியவற்றை போதிப்பதை தொடரக் கடமைப்பட்டுள்ளோம். வேதாந்தமும், சாக்கியமும் பொய்யான தத்துவ முறைகள், இவ்விஷயத்தில் சர்ச்சைசெய்வதற்கு ஒன்றுமில்லை.

...சமஸ்கிருதக் கல்வியில் இதனை போதித்துவரும் அதே நேரத்தில் இதன் செல்வாக்கை எதிர்த்து செயல்புரியும் விதமாக ஆங்கிலப் பாடத்தின் வலிமையான தத்துவங்களின் மூலமாக நாம் அவற்றை எதிர்க்கவேண்டும்".

### சமஸ்கிருதமும் மதமும்: தற்போதைய நடவடிக்கையின் தீங்குபயக்கும் முன்னறிகுறி

இன்று சமஸ்கிருதத்தைப் போதிப்பது மற்றும் அதனை பள்ளிகளில் கட்டாயப்பாடமாக மாற்றுவது குறித்த கேள்விகள் எழுப்பப் படுகிறபோது நாம் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகள் மட்டுமல்லாது இந்நடவடிக்கை யோடு சம்பந்தப் பட்டிருக்கின்ற சில இக்கட்டான அம்சங்களும் மிகச்சரியாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படவேண்டும். சமஸ்கிருதம் அதன் புகழின் உச்சியில் இருந்த கால கட்டத்திலிருந்து அது இந்துமதத்தோடு அடையாளப்படுத்தப்பட்டது என்பதையும் அதன் வழிபாட்டுமுறைகள் மற்றும் அதனை பெருமிதத்துடன் பின்பற்றிவருதல் ஆகியவை மதவெறிவாதத்திற்குக் கொண்டு செல்லும் என்ற விஷயங்கள் இங்கே புறந்தள்ளப் பட்டுவிடமுடியாது. இயற்கையாகவே இந்து வல்லாத பிற நம்பிக்கை கொண்ட மாணவர்கள் சமஸ்கிருதத்தைக் கற்கும்படி கட்டாயப் படுத்தப்படுகிறபோது அது அதிருப்திக்கும் வேறுபட்ட சமூகங்களிடையே தேவையற்ற பதற்றங்களுக்கும் வழிவகுக்கிறது. ஏற்கனவே இந்து வழிபாட்டு முறையாக இருக்கின்ற சூரிய நமஸ்காரத்தை அதாவது, சூரியக்கடவுள் வழிபாட்டை கட்டாயமாக பள்ளிகளில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது பள்ளிச் சூழலைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. மதச்சார்பற்ற கல்வி என்பது எந்த ஒரு மதத்தின் உள்ளடக்கத்திலிருந்தும் நடைமுறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று மிகத் திட்டவட்டமாகக் கோருகிறபோது, அதனையும் மீறி நவீன இந்திய மற்றும் ஐரோப்பிய மொழிகளுக்கு மாற்றாக சமஸ்கிருதத்தைக் கட்டாயமாகப் போதிப்பது கல்வியின் நலனுக்குத் தீங்கிழைப்பது மட்டுமல்ல சமூகத்திற்கும் நாசகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறாக இந்த நடவடிக்கை, பள்ளிகளில் கட்டாயமாக மொழிப்பாடத்தை போதிப்பது தொடர்புடைய எவ்விதத் தீங்கும்விளைவிக்காத பாடத்திட்ட திருத்த நடவடிக்கையாக இருக்க வில்லை. இது மிகவும் அபாயத்திற்கான அறி குறியை முன்னறிவிக்கிறது. பிஜேபி ஆர்எஸ்எஸ் கூட்டணி நாட்டில் கொஞ்சம் நஞ்சம் மிச்ச மிருக்கின்ற விஞ்ஞானப்பூர்வ, மதச்சார்பற்ற, ஜன நாயகப்பூர்வக் கல்வியையும் தங்களின் சூழ்ச்சி மிகுந்த காவிமயமாக்கல் திட்டத்தின் மூலமாக முழுவதுமாகத் துடைத்தெரிய முயற்சிக் கிறார்கள் என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டி யிருக்கிறோம். சமஸ்கிருதத்தைத் திணிக்கின்ற பிரச்சினை இந்த படுநாசத்தீயில் மேலும் எண்ணெய் வார்க்கிறது. நமது தேசியப் பாரம் பரியம் என்ற பெயரிலும், நமது பாரம்பரியப் பெருமைகளை மீட்டெடுப்பது என்றும் பிஜேபி–ஆர்எஸ்எஸ் கூட்டணி அனைத்து வகையான காலவதியாகிப்போன பழமையான குருட்டுத்தனமிக்க கருத்துக்களைப் பிரச்சாரம் செய்து விஞ்ஞானப்பூர்வ எண்ணப் போக்கு களையும் ஜனநாயக மதிப்புகளையும் அழித் தொழித்து கலாச்சார பாசிசமயத்தைக் கொண்டு வர முயல்கிறது. அதே நேரத்தில் வாழ்க்கைபற்றிய நவீன விஞ்ஞானப்பூர்வக் கண்ணோட்டத்திற்கு எதிராக தங்களின் ஒருதலைப்பட்சமான தேசியப்பாரம்பரிய பெருமிதக் கண்ணோட்டத்தை அவர்கள் முன்னிறுத்திவருகிறார்கள். மேலும் நவீன இந்திய தேசியத்தைக் கட்டமைப்பதற்குக் காரணகர்த்தாக்களான ராம்மோகன், வித்யாசாகர் போன்றோர் சமஸ்கிருதக் கல்வி முறை அழிக்கப்பட்டதற்குப் பொறுப்பாவார்கள் என்று இவர்கள் கூறுகின்றார்கள்.

எவ்வித தயக்கமுமின்றி மிகுந்த கர்வத்துடன் அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக பல்வேறு செயல் திட்டங்களை அறிவித்துவருகிறார்கள். சமீபத்திய அவர்களின் செயல்திட்டங்களான கீதையை தேசிய நூலாக அறிவிப்பது, மாணவர் களுக்கு நீர் மேலாண்மை பற்றிய விழிப்பு ணர்வைப் பெற வைக்கிறோம் என்ற பெயரில் வேதத்தை பள்ளிகளின் பாடத்திட்டத்தில் சேர்ப்பது. கிருஸ்துமஸ் நாளை அனுஷ்டிப்பதற்கு மாற்றாக டிசம்பர் 25ஆம் நாளை ஏபி வாஜ்பாய், மதன் மோகன் மாளவியா ஆகியோரின் பிறந்த நாள் நினைவு நாளாக அறிவித்து அந்த தினத்ததை "நல்ல நிர்வாக நாள்" என அனுஷ்டிக்க மத்திய மனிதவளத்துறை அனுப்பிய சுற்றறிக்கை ஆகிய இவையனைத்தும் அவர்களின் மிகமோசமான திட்டத்திற்கான பளிச்சிடும் உதாரணங்களாகும். சமீபத்தில் ஆக்ராவில் முஸ்லீம் மற்றும் கிருஸ்தவர்களை பலவந்தமாக மறுமதமாற்றம் செய்ய செய்யப்பட்ட சமீபத்திய மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்ட பிரச்சாரம் மிகவும் வெறுக்கத்தக்க ஒன்றாகும். இவை அனைத்தும் காவிப்படைகள் ஒரு முழுமூச்சான தாக்குதலுக்குத் தயாராக இறங்கியிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன.

இவ்வாறாக ஆர்எஸ்எஸ் பிஜேபி கூட்டணி பெரும்பான்மை சமூகத்தவரின் மதஉணர்வு களைத் தூண்டிவிட்டு வகுப்புவாத உணர்வு களையும் சகோதரப் பூசல்களையும் முடுக்கி விடுகிறார்கள். ஆனால் இவை அனைத்தையும் அவர்கள் இந்துமதத்தின்மீதான உண்மையான அன்பு, சமஸ்கிருத மொழியின்மீதான நேசம், ஏனைய பிற உன்னத நோக்கம், மற்றும் நேர்மை யான காரணகாரியத்தின் அடிப்படையிலோ அல்லது அனைத்து மக்களுக்கும் நல்ல தரமான கல்வி வழங்கப்படவேண்டும் என்ற எண்ணத் திலோ அவர்கள் செய்யவில்லை. மேலும், காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தால் பல்வேறு தொடர் சீர்திருத்தங்கள் மூலமாக கல்வி அமைப்புமுறையில் கொண்டுவரப் பட்டிருக்கின்ற கேடுகளையும் அதனால் ஏற்பட்டிருக்கின்ற கட்டுக்கடங்காத கல்வி வியாபாரமயம் மற்றும் கல்வி மறுக்கப்படும் நிலையையும் மற்றும் குறைந்தபட்ச தரமான கல்வியைக்கூட பெற முடியாதவாறு பொதுமக்கள் சுரண்டப்படுகின்ற நிலை ஆகிய எந்தக் கேடுகளையும் சரி செய்கின்ற நல்ல நோக்கம் அவர்களுக்கில்லை.

அதற்கும் ஒரு படிமேலாக இது வரையில் முன்னுரிமை பெற்ற மாணவர் பகுதியினரில் யாரெல்லாம் இதுவரையில் கல்வி பெற்று வந்தார்களோ அவர்களுக்கும்கூட இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் மாமனிதர்களின் ஓய்வொழிவற்ற நீண்ட போராட்டத்தின் விளை வாக நமது நாட்டில் உருவான விஞ்ஞானப்பூர்வ மதச்சார்பற்ற கல்வியின் உயர்ந்தபட்ச அறிவின் சாராம்சங்களை அகற்றிவிட்டு கல்வி வழங்க காவிக்கூட்டம் முயற்சித்துவருகிறது. இது நிச்சயமாக காவிமயப்படுத்தப்பட்ட கல்வியே ஆகும். இது பழமைவாத குருட்டு நம்பிக்கை களைக் கொண்டது மட்டுமல்ல எந்த காரணகாரிய அறிவிற்கும் உட்படாததாகும். இவ்வாறாக அவர்கள் முன்னேற்றத்திற்கு அவசியமான கல்வியை வழங்கி நாட்டின் எதிர்காலத் தலைமுறையை திறனூட்டுவதற்குப் பதிலாக நீண்டகாலத்திற்கு முன்பே விட்டொழிக்கப்பட்ட ஒன்றை நோக்கி நாட்டைப் பின்னுக்கிழுக்கிறார்கள்.

பிற்போக்குச் சிந்தனைகளைக் கொண்ட கல்வியை வழங்குவது நாட்டு மக்களிடத்தில் மிகுந்த நாசகரமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். இவ்வாறு மதஅடிப்படையிலான கல்வியின் மூலம் அவர்கள் மக்களிடத்தில் பிளவை ஏற்படுத்தவே முயற்சிக்கிறார்கள். இந்துக்கள் மற்றும் இந்துக்கள் அல்லாதவர்கள் என்று உழைக்கும் மக்களின் ஒற்றுமையை உடைக்க முயற்சிக்கிறார்கள். நமது பரந்துபட்ட மக்கள் தொகையில் பிரிக்கமுடியாத அங்கமாக இருக்கின்ற இந்துக்கள் மற்றும் இந்துக்கள் அல்லாத மக்கள் பிரிவினர் அனைவருமே இந்த நாட்டின் நெருக்கடி பீடிக்கப்பட்டுள்ள முதலாளித்துவ அமைப்பு முறையினால் தொடர்ந்து ஈவிரக்கமின்றிச் சுரண்டப் படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எவ்வளவு கடுமையாக முயன்றும் ஆளும் ஏகபோகங்கள் நெருக்கடிக்குள் இழுத்து விடப்பட்டிருக்கின்ற இந்த நாட்டை அதிலிருந்து மீட்பதில் தொடர்ந்து தோல்வியைத் தழுவி வருகிறார்கள்.

எனவே இயற்கையாகவே சுரண்டப்படுகின்ற மக்கள் மதம், ஜாதி, இனம், மொழி மற்றும் எந்த வொரு பிரிவினை மரபைக் கொண்ட வர்களானாலும் இவையாவற்றையும் கடந்து அவர்களிடத்தில் வலிமையான அதிருப்தியை இது உருவாக்குகிறது. முதலாளித்துவத்திற்கெதிராக வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங்களை வளர்த்தெடுப்பதற்கான இயற்கையான இந்த உள்ளப்பாங்கு இறுதியாக புரட்சிகர போராட்டங் களுக்கு வழிவகுக்கும். ஆளும் வர்க்கம் ஒடுக்குமுறைசெய்வதன்மூலம் தங்களது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவியலாது என்பதை நன்கறிந்திருக்கின்றனர். ஆகவே தங்களுக்கெதிராக ஒன்றுபட்ட இயக்கங்களில் மக்கள் இணைந்துவிடாதவண்ணம் அவர்களின் ஒற்றுமையைக் குலைக்க பல்வேறு சூழ்ச்சிகரமான நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கத் தயாராகி விட்டார்கள். வகுப்புவாத வெறியுணர்வைக் கிளப்பிவிட்டு கொஞ்சம் நஞ்சம் நாட்டில் இருந்துவருகின்ற மதச்சார்பற்ற தன்மையையும் துடைத் தெறிவதை நோக்கி அனைத்து நடவடிக்கைகளையும் செய்துவருகிறார்கள். ஆளும் வர்க்கத்தின் மிக நம்பகமான அடிபணியும் சேவகன் என்ற நபிக்கையைப் பெறுவதற்காகத் தொடர்ந்து பல்வேறு முயற்சிகளைச் செய்து வந்த ஆர்எஸ்எஸ் பிஜேபி கூட்டணி தற்போது ஏகபோகங்களின் செல்லப்பிள்ளையாக வளர்ந்திருக்கிறது. ஆகவே அவர்கள் ஆளும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை புரிகின்ற வகையில் தங்களின் தீவிரமான காவி மயமாக்கும் நிகழ்ச்சிநிரலை கையிலெடுத் திருக்கிறார்கள். ஒருபுறத்தில் அவர்கள் எவ்வித நியாயப்பூர்வமான சிந்தனையுமற்ற, வாழ்கையை எதிர்கொள்ளத் தைரியமற்ற மனிதத்தன்மையற்ற ரோபோட்டுகளாக மக்களை மாற்றுகிறவகையில் கல்வியை உருமாற்றுகிறார்கள். மறுபுறம், ஆளும் வர்க்கத்திற்கு சாதகமாக புரட்சிக்கு எதிரான நலன்களுக்குச் சேவை செய்கின்ற வகையில் அவர்கள் சமூகங்களுங்கிடையே நிலவும் இணக்கமான சூழலைக் கெடுத்து முதலாளித்துவ எதிர்ப்பு வர்க்க மற்றும் வெகுஜனப் போராட்டங் களைச் சீர்குலைக்கிறார்கள். ஆகவே இத் தருணத்தில் விஷம் கக்கும் பாசிசப்போக்கின் பேரபாயம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டு மென்றும், பிஜேபி மற்றும் சங்கப்பரிவாரங் களின் இந்தப் பாசிசப் போக்கையும் பிளவுவாத, வகுப்புவாத அரசியல் போக்கை எதிர்த்து தீர்மானகரமாக மக்கள் போராட முன்வர வேண்டுமென்று அறைகூவல் விடுக்கிறோம்.




எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்), சிபிஐ, சிபிஐ (எம்), சிபிஐ (எம் எல்) நான்கு இடது சாரிக் கட்சிகள், அமெரிக்க அதிபர் ஒபாமாவின் வருகையை எதிர்த்து ஜனவரி 21, 2015 சென்னை, புரசை வாக்கத்தில் நடத்திய கூட்டத்தில், மேடையில் இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள்.

# உலகளவில் தீவிரவாதத்தை உருவாக்குவதும் நடத்துவதும் யுஎஸ் ஏகாதிபத்தியமே

2ம் பக்கத் தொடர்ச்சி

விஷத்தைக் கலந்தனர், மக்களைக் கொல்வதற்காக விஷம் கலந்த உணவுப் பொட்டலங்களை வீசினர். 51,000 தொழிற்சாலைகள், 28,000 பள்ளிகள், 4500 மருத்துவமனைகள், 579 ஆய்வகங்கள், அதோடு 2.8 லட்சம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. நவம்பர் 1950 இல் அமெரிக்க ராணுவத் தளபதி மேக் ஆர்தர் வடகொரியாவின் அனைத்து நகரங்கள், கிராமங்கள் மற்றும் தொழிற்சாலைகளை தரைமட்டமாக அழிக்கும்படி விமானப் படைக்கு உத்தரவிட்டார். ஹோயெர்யங் நகரத்தை அழிப்பதற்காக நாப்பாம் குண்டுகள் வீசப்பட்டன. வடகொரியாவின் மீது அணு குண்டு வீசுவதற்கு பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் ட்ரூமேன் அறிவித்தார். அடுத்த 120 ஆண்டுகளுக்கு எந்த உயிரினமும் இருக்க முடியாதபடி ஒட்டுமொத்த பகுதியும் கதிர்வீசும் கதிரியக்கப் பொருட்களால் நிரப்பப்படும் என்று மேக் ஆர்தர் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார். உலக வரைபடத்திலிருந்து அந்த சோசலிச அரசை அகற்றுவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் பயன்படுத்தாத யுக்திகளே இல்லை எனலாம்.

அதேபோல் இந்தோனேசியாவிலும் வரலாற்றில் மிகவும் கொடிய நிகழ்வாக 5 லட்சம் மக்களைக் கொன்ற ராணுவ சர்வாதிகாரி சுகர்தோவிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் துணைநின்றது. மேற்கு ஆப்பிரிக்காவின் அங்கோலாவில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஆயுதம் தரித்த வலதுசாரி யுஎன்ஐடிஏ என்ற குழுவை ஊடுருவச் செய்து உள்நாட்டுப் போரை உருவாக்கியதும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே, அதில் 7.5 லட்சம் மக்கள் உயிரிழந்ததோடு 65 ஆயிரம் பேர் ஊனமாயினர். போஸ்னியா, கொசோவா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 35,000 கொத்துக் குண்டுகளையும், நூற்றுக்கணக்கான சுற்றுக்கள் கதிரியக்க யுரேனிய குண்டுகளையும் லேசர் குண்டுகளையும், ஏவுகணைகளையும் பயன்படுத்தினர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்கை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அங்கே பொம்மை அரசாங்கத்தை நிறுவிய பின்னர் ஈராக் மக்கள் நாடுமுழுவதும் ஒன்றுபட்டு எதிர்ப்பியக்கங்களைக் கட்டினர், தங்களது நாட்டை விடுவிப்பதற்காக துணிச்சல்மிக்க சுதந்திரப்போராட்ட வீரர்கள் தங்களது உயிர்களையும் தியாகம் செய்தனர். சுதந்திரத்தை நேசிக்கும் ஈராக் மக்களின் எதிர்ப்பை நசுக்குவதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஈராக் மக்கள் மீது புதிய தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர். கார்ப்பெட் குண்டுகளை வீசி கிராமம் கிராமமாக அழித்து வருகின்றனர். விடுதலைப் போராட்ட வீரர்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக ஷியா–சுன்னி முஸ்லீம் பிரிவினரிடையே நயவஞ்சகமாக மோதலைத் தூண்டிவருகின்றனர். 2005–2009 காலத்தில் ஈராக்கில் பலுஜாவில் கேன்சர், சிசுக்கள் மரணம், பிறப்பு பாலின–விகிதம் என்ற தலை உல்ஸ்டர், மலக்ஹம்தன், மற்றும் என்டீசர் அரியாபி பல்கலைக்கழகத்தின் கௌரவ பேராசிரியர் (visiting professor)முனைவர் கிரிஸ் பஷ்பி நடத்திய ஆய்வின் மூலம், 1945இல் ஹிரோசிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டு வீசப்பட்டு அதில் பிழைத்தவர்கள் கூறிய பாதிப்பைக் காட்டிலும் ஈராக்கின் பலுஜா நகரத்தில் சிசு மரணம், கேன்சர், லுக்கேமியா போன்றவை கடுமையாக அதிகரித்துள்ளன என்று தெரியவந்துள்ளது. இந்த சர்வேயில் 11 ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு பலுஜாவின் 711 வீடுகளுக்குச் சென்றனர். இந்த ஆய்வின்மூலம் புற்றுநோய் நான்கு மடங்கு அதிகரித்துள்ளதும், 14வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு புற்றுநோய் பாதிப்பது 12 மடங்கு அதிகரித்துள்ளதும், 1000க்கு 80 என்ற அளவில் சிசு மரணம் நிகழ்வதாகவும் தெரியப்படுத்தியுள்ளது. லுக்கேமியா 38 மடங்கு அதிகரித் துள்ளது, பெண்களுக்கான மார்பகப் புற்றுநோய் 10 மடங்கு அதிகரித்துள்ளது, லிம்போமா மற்றும் மூளைக் கட்டியும் பலுஜா நகரத்தின் இளைஞர்களிடையே குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. புற்றுநோய் பாதிப்பு அதிகமாக பாதித்துள்ளதோடு மட்டுமன்றி அது எவ்வளவு வேகமாக மக்களைப் பாதிக்கிறது என்பது மிகவும் கவலைக் குரியதாகிறது. புதிதாகப் பிறக்கும் ஆண் பெண் குழந்தை விகிதமும் மாறியுள்ளது. சாதாரணமாக பிறப்பு விகிதம் 1000 பெண்களுக்கு 1050 பையன்கள் என்றிருந்த பெண் ஆண் விகிதாச்சாரம் இருந்தது. ஆனால் 2005 முதல் ஆண்குழந்தை பிறப்பில் 18% குறைந்துள்ளது, ஆதலால் 1000 பெண்களுக்கு 850 ஆண்களாகக் குறைந்துள்ளது. பெண்களைக் காட்டிலும் ஆண்களை இந்த மரபுமாற்றம் அதிகமாகப் பாதித்துள்ளது என்பதையே இந்த பாலின–விகிதம் காட்டுகிறது. பாலின–விகிதத்தில் இதே போன்ற மாற்றம் ஹிரோசிமாவிலும் கண்டறியப்பட்டது. அதன் பின்னர் வெள்ளை பாஸ்பரஸ் மற்றும் யுரேனியம் போன்ற வேறு ராணுவத் தளவாடங்களையும் பயன்படுத்தியதாக அமெரிக்கப் படைகள் ஒப்புக்கொண்டன. எனவே பலுஜாவில் அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலின் விஷத்தன்மை ஹிரோசிமாவைக் காட்டிலும் மோசமானது என்று கூறப்பட்டுள்ளது.

### அமெரிக்க ஏகாதிபத்தியம் – உலகளாவிய தீவிரவாதத்தின் தோற்றுவாய்

மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதையும், அச்சுறுத்தி மிரட்டுவதற்கும், வெளிநாடுகளில் ஊடுருவி கொலைவெறித் தாக்குதல் நடத்துவதற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கூறும் காரணம் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக என்பதுதான். ஆனால் இந்த தீவிரவாதத்தை உருவாக்கி செயல்படுத்துவது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளன்றி வேறு யார்? முஜாஹிதீன், அல் கொய்தா, தாலிபான் போன்ற தீவிரவாத இயக்கங்கள் எங்கிருந்து தோன்றின? யார் உருவாக்கியது? வரலாற்றை சற்று பின்நோக்கிப் பார்க்கலாம்.

1947இல் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெளியேறியதும் இன்றைய இந்தியாவும் பாகிஸ்தானும் பிறந்தன, சில பிரச்சினைகளிருப்பினும் ஆப்கானிஸ்தானுக்கும் அதுவொரு புதிய தொடக்கமாக இருந்தது. தனது ராணுவத்தை நவீனமயப்படுத்துவதற்கு அமெரிக்காவிடம் ஆப்கானிஸ்தான் உதவி கோரியது, ஆனால் அமெரிக்கா அதை நிராகரித்தது. பின்னர் அது சோவியத் யூனியனிடம் உதவி கோரியது. தொடக்கத்தில் ஆப்கானிஸ் தானுக்கும் சோவியத் யூனியனுக்கும் உறவு நல்லபடியாகவே இருந்தது, ஏன் ஐம்பதுகளின் இறுதியிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் கூட ஆப்கானிஸ்தானில் ஜனநாயக சக்திகள் வளர்வதற்கு சோவியத் யூனியன் உதவியது. இதன் விளைவாக அங்கே முதன்முதலாக சில ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் சோவியத் யூனியனில் திருத்தல்வாத தலைமை வந்தவுடன் வல்லாதிக்க மனப்பான்மையுடன் செயல்படத் தொடங்கினர். அவர்களுடைய இந்த நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் ஆப்கன் மக்களிடையே சோவியத்–எதிர்ப்பு உணர்வை உருவாக்கியது. இது ஆப்கன் விவகாரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தலையிடுவதற்கு வழிவகுத்தது. சிஐஏ மூலமாக சூழ்ச்சிசெய்து குறிப்பாக சோவியத் யூனியன் ஆதிக்கத்திற்கு எதிராகவும், பொதுவாக சோசலிசத்திற்கு எதிராகவும் விஷமத்தனமான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். பொருளாதார ரீதியாக, அரசியல்ரீதியாக, சமூக ரீதியாகவும் அந்த நாடு சிதறடிக்கப்பட்டது, மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர், ஜனநாயகம் வேரூன்றுவதற்கான செயல்முறைப் போக்குகள் தடைபட்டன, ஜனநாயக சக்திகள் உருவாவதற்கு இயற்கையான போக்கில் வளர்வதும் தடுக்கப்பட்டன, பலகீனமான மத்திய அரசாங்கம் இருந்தபடியால் கிராமப்புறப் பகுதிகள் போர் பிரபுக்களின் பிடியில் விடப்பட்டன. இந்த மோசமான சூழ்நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அங்கே ஏற்கனவே இருந்த மத பழமைவாதிகள் தங்களது தலையை உயர்த்தி தங்களது வேலையைக் காட்டத் தொடங்கினர். எழுபதுகளின் இறுதியில் சி.ஐ.ஏ. மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நேரடி மற்றும் மறைமுகமான ஆதரவுடன் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவான முஜாஹிதீன் பிறந்தது. இறுதியாக, சிஐஏ வின் ஆவணத்திலேயே ஒப்புக்கொண்டிருப்பதுபோல், சோவியத்–ஆதரவு ஆட்சியை எதிர்ப்பவர்களுக்கு காபூலில் ரகசியமாக அமெரிக்கா உதவுவது 1979இல் தொடங்கியது. அடுத்த பத்து ஆண்டுகள் சோவியத்–எதிர்ப்பு கொடூர போரில் ஆப்கன் மக்களை பயங்கர பிராந்திய போராட்டக்காரர்கள் ஈடுபடுத்தியதையும் பழங்குடியின மக்களிடையேயான மோதல்களையும் பார்த்தது. தங்களாலேயே உருவாக்கப்பட்ட இந்த குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சிஐஏ மற்றும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொள்ளும் கிளர்ச்சியாளர்களையும் முஜாஹிதீனின் பல்வேறு பிரிவினர்களையும் ஆயுதங்கள், நிதி, செயற்கைக் கோள்வசதி, உளவுத் தகவல்கள் போன்ற உதவிகளை வழங்கினர், அந்தக் குழுக்களுக்கு ஆட்கள் தேர்வு செய்வதற்கும் உதவி செய்தனர், பாகிஸ்தான் உதவியோடு அவர்களுக்கு ராணுவப் பயிற்சியும் வழங்கினர்.

அதோடு, 1988 இல் மற்றொரு இஸ்லாமிய பழமைவாத அமைப்பான அல் கொய்தா உருவாக்கப்பட்டது. ஒசாமா பின் லேடன் தலைமையிலான ஆப்கான் சாராத முஜாஹிதீன் அமைப்பு பல்வேறு நாடுகளுக்கும் பரவியது. முழுக்க முழுக்க பிற்போக்குவாத, அறிவு விருத்திக்கு எதிரான, கருத்துக்கள் மற்றும் சிந்தனைகளின் அடிப்படையில் வளர்ந்த இந்த முஸ்லீம் வெறிபிடித்த பழமைவாத அமைப்பு, மதத்தின் பெயரால், முற்போக்குக் கருத்துக்களுக்கு தடைவிதித்ததோடு, தனது கருத்துக்களுக்கு எழும் எந்த எதிர்ப்பு களையும் அழித்தொழிக்கும் பாணியில் செயல்பட்டது. அமெரிக்க ஆட்சியாளர்களுக்குத் தெரிந்துதான் லேடன் இந்த இயக்கத்தை உருவாக்கினார். சவுதி அரேபியா மற்றும் அமெரிக்காவிலிருந்து நிதி உதவிபெற்று இயங்கிய இந்த அமைப்பு சிஐஏ வுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. உண்மையில், இத்தகைய அபாயகரமான அமைப்பை, அதற்கும் மேலாக அனைத்து முஜாஹிதீன்களையும் அடிப்படைவாத சக்திகளையும் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனுக்கு–எதிரான தங்களது பிரச்சாரத்திற்கு அமெரிக்காவும் சிஐஏவும் அபாயகரமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

1989 இல், சோவியத் யூனியனின் திருத்தல்வாத தலைமை மேற்கொண்ட சாகசவாத முடிவால் ராணுவத் தலையீடு தோல்வியில் முடிந்து, அதனால் அவர்களது படைகளை திரும்பப்பெற நிர்ப்பந்தம் உருவானது. முஜாஹிதீன்களின் ஆதரவோடு அரசாங்கம் அமைந்தது. ஆனால் சூழ்நிலை மாறவில்லை. போர்பிரபுக்களுக்கு இடையே நடைபெற்ற கடுமையான பதவிச் சண்டையால் மூன்று ஆண்டுகள் நீடித்த குண்டு வீச்சு மற்றும் ராக்கெட் தாக்குதல்களால் காபூல் நகரம் சின்னாபின்னமானது, ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர், நூறாயிரக் கணக்கானவர்கள் அகதிகள் முகாம்களுக்குச் செல்ல நேர்ந்தது, அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியது, அதோடு லட்சக்கணக்கில் வெளியேறியவர்கள் திரும்புவதற்கும் தடையானது. நாடு சிதறி பல பகுதிவாரியான போர் பிரபுக்களின் ஆதிக்கத்தில் தனித்தனி பகுதிகளானது. இத்தகைய பரிதாபகரமான நிலையற்ற சூழ்நிலையில்தான் 1994இல் தாலிபான்கள் உருவாயினர். இந்த தாலிபான்களும் கூட அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் மற்றும் பாகிஸ்தான் ஆட்சியாளர்களின் ஆதரவோடுதான் உருவாயினர். ஆப்கானிய மக்கள், குறிப்பாக இளைஞர்கள், தொடர்ச்சியான போர்களால் தங்களது நாட்டில் எந்தவொரு அமைதியையும் காணாமல், வேரற்றவர்களாகி, வேலையின்றி, பொருளாதாரச் சிக்கலில் சிக்கி நிம்மதியின்றியும் ஆதலால் நோக்கமின்றியும் திக்கு முக்காடிவந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்ட தாலிபான்கள் ஆப்கன் மக்களையும், அகதிகளாகவும் அனாதைகளாகவும் ஆன இளைஞர்களிலிருந்து தங்களுக்கு ஆட்களைச் சேர்த்தனர். இடதுசாரி ஜனநாயக இயக்கம் ஏதும் இல்லாத சூழ்நிலைமையில், இந்த தாலிபான்கள் வேகமாக வளர்ந்தனர். இறுதியில் பாகிஸ்தானின் உதவியோடு 1996இல் காபூலைக் கைப்பற்றினர். ஆயுதத் தாக்குதல்கள் மூலம் வடக்கு சிரியா முதல் மத்திய ஈராக் பகுதிகள் வரை கைப்பற்றியுள்ள மனிதகுலத்தை மிகக் கொடுமையாகத் தாக்கும் மிக மோசமான தீவிரவாதக் குழுவாக உருவெடுத்திருக்கும் ஈராக் மற்றும் சிரியாவில் இஸ்லாமிய அரசு (ஐஎஸ்ஐஎஸ்) அமைப்பு கூட அல்கொய்தாவிட மிருந்து உருவானதுதான் என்று

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 26th February 2015

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஆளும் முதலாளித்துவ வர்க்கங்களின் ஒத்துப்போகும் பொருளாதார அரசியல் நலன்களே இந்தியாவையும் அமெரிக்காவையும் நெருக்கமடையச் செய்கின்றது

7ம் பக்கத் தொடர்ச்சி

கூறப்படுகிறது. இந்த அனைத்து தீவிரவாத அமைப்புகளும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் துணையோடு உருவானவையே. இப்படிப்பட்ட மனிதகுலத்திற்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் தலைவனான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அதிபரைத்தான் இந்திய அரசாங்கம் குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினராக கௌரவப் படுத்தியுள்ளது.

### அமெரிக்க அதிபருக்கு ஏன் இந்த அழைப்பு

நாம் இதுவரை விவாதித்ததைப் போன்று தீவிரவாதத்தை ஊக்குவித்துக் கொண்டே மறுபுறம் அதைத் தடுக்கிறேன் என்ற பெயரில் நயவஞ்சக நாடகமாடும் உலகம் முழுவதும் கொடிய குற்றங்களையும், பல்வேறு நாடுகளை ஆக்கிரமித்து அந்நாடுகளின் இறையாண்மையை காலிலிட்டு மிதித்து மக்களின் சுதந்திரத்தை பறித்து, பெண்கள்–குழந்தைகள்–வயதானோர் என லட்சக்கணக்கான அப்பாவிப் பொது மக்களை கொன்று குவித்து எப்போதும் போர் அச்சத்திலேயே உலகை வைத்திருக்கும், மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக, சொல்லப் போனால் மனித நாகரீகத்தின் மனித குலத்தின் எதிரியாகத் திகழும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தற்போதைய அரசியல் முகமே பராக் ஒபாமா. அவரை சிறப்பு விருந்தினராக, அதுவும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின்மூலம் விடுதலைபெற்ற இந்தியாவின் குடியரசு தின விழாவிற்கு, அழைப்பது, குற்றங்களிலேயே மிகக் கொடிய குற்றத்தை உயர்ந்த பீடத்தில் அமர்த்துவதற்குச் சமமாகும். பின் எதற்காக இத்தகைய மனித குலத்தின் எதிரியோடு மோடி அரசாங்கம் கொஞ்சிக் குலாவுகிறது? இதற்கு விடைகாண, ரகசியத் திட்டத்தை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்திய ஏகபோகங்கள் நிதி மூலதனத்தை ஏற்றுமதி செய்து ஏற்கெனவே ஏகாதிபத்திய குணாம்சத்தை எட்டிவிட்டன. ஆக ஒபாமா அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பிரதிநிதியாக இருப்பதுபோல், இந்த துணைக்கண்டத்தில் பிராந்திய வல்லரசாகத் துடிக்கும் இந்திய ஆளும் ஏகாதிபத்தியவாதிகளின் இன்றைய பிரதிநிதி நரேந்திர மோடி இருக்கிறார். இந்திய ஏகபோகங்கள் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் பலகீனமான லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இந்திய நிதி மூலதனத்தை ஏற்றுமதி செய்ய நினைக்கின்றன. தங்களது தாக்கத்தை விரிவாக்க நினைக்கின்றனர். இந்திய கார்ப்பொரேட் நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடு மார்ச் **2013** இல் **2.16** மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. அதோடு ஒப்பிடுகையில் மார்ச் **2014** இல் **5.23** பில்லியன் அமெரிக்க டாலராக அது இரு மடங்காகி இருக்கிறது என்று இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள தகவல் தெரிவிக்கிறது. இது கடந்த **8** மாதங்களில் மேலும் உயர்ந்திருக்கக் கூடும். உலக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு கிட்டத்தட்ட இணையான அதிகாரம் பெறவேண்டும் என்று இந்திய ஏகபோகங்கள் நீண்டகாலமாகவே கனவு கண்டுவருகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு பொருளாதார, அரசியல் மற்றும் ராணுவ கூட்டை நெருக்கமாக்குவதன்மூலம் இந்த ஆசையை கச்சிதமாக நிறைவேற்ற முடியும் என்று இந்திய ஆளும் ஏகபோகங்கள் நினைக்கின்றனர். மற்றொரு புறம் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நம்பகத்தன்மையை இழந்து வருகிறது, பலகீனமான நாடுகளும் அதை ஏற்க மறுக்கின்றன, அதன் பொருளாதாரம் கடும் நெருக்கடியில் இருக்கிறது. சீனாவிடம் கடுமையான போட்டியை சந்தித்து வருகிறது. நாகரீக நாடுகளின் நட்பை இழக்கும் சூழலில் உள்ளது. இத்தகைய சூழலில் சீனாவின் வளர்ச்சியை முடிந்த அளவு தடுப்பதற்கு ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஒரு வலுவான கூட்டணி தேவைப்படுகிறது. எனவே அவர்களுக்கு இந்தியாவின் கூட்டணி தேவைப்படுகிறது. சொல்லப்போனால், ஆசியாவில் ஜப்பான், இந்தியா, மற்றும் ஆஸ்திரேலியாவுடன் ராஜதந்திர, பொருளாதார, மற்றும் ராணுவ ஒத்துழைப்பை உருவாக்கி ஒரு அச்சை உருவாக்க அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் எத்தனிக்கின்றனர். இது மற்றொரு முக்கியமான அம்சமாகும்.

மேற்கு ஆசியாவின் பல்வேறு நாடுகளில் அமெரிக்க ராணுவம் தொடர்ச்சியாக நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்கும், அந்தப் பகுதிகளில் பென்டகன் ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் அப்பிராந்தியம் முழுவதும் கடுமையான கோபம் அதிகரித்து வருகிறது. மக்களின் இந்த எதிர்ப்பை ராணுவ பலத்தைக் கொண்டு அடக்குவது கடினம், அது எதிர் விளைவையும் ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்லாது இதுபோன்று மேற்கு ஆசிய நாடுகளுக்கு ராணுவத்தை அனுப்பி நிறுத்திவைப்பதற்கு அமெரிக்காவிற்குள்ளேயே பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. மக்கள் எதிர்ப்பின் அழுத்தத்தால் பலபகுதிகளில் இருந்து ராணுவத்தை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் திரும்பப்பெற்றும் வருகின்றனர். ஆனாலும்கூட வளமான எண்ணை ஆதாரம் இருக்கும் மேற்கு ஆசியாவில் தங்களது பிடியை விட அவர்களது ஏகாதிபத்திய நலன் அனுமதிக்காது. எனவேதான், இந்தப் பகுதிகளில் ஓரளவு ஆதிக்கம் செலுத்தும் இந்தியாவுடன் நட்புறவு கொள்வதன்மூலம் தங்களது ஏகாதிபத்திய நலனைப் பாதுகாக்கமுடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இது தொடர்பாக மற்றொரு விஷயத்தையும் நாம் இங்கே குறிப்பிட விரும்புகிறோம். அரசியல் சுதந்திரம் பெற்ற பிறகு ஆளும் இந்திய முதலாளித்துவவர்க்கம் துரிதமான தொழில் வளர்ச்சிக்காகவும் இந்தியாவை சக்திவாய்ந்த முதலாளித்துவ நாடாக வளர்ப்பதற்காகவும் தனது உடனடி வர்க்கத் தேவைக்காக ஒரு புறம் சோசலிச முகாமிடமும் மற்றொருபுறம் ஏகாதிபத்திய–முதலாளித்துவ முகாமிடமும் ஒரே நேரத்தில் பேரம் பேசி வந்தது. சோசலிசம் மற்றும் முதலாளித்துவம் என்று இருவேறு எதிரெதிர் அமைப்புகளாக உலகம் பிளவுற்றிருப்பதை தனக்கு சாதகமாக முழுமையாகப் பயன்படுத்திக்கொண்ட ஆளும் இந்திய ஏகபோகங்கள், அப்போதிருந்த சர்வதேச சூழ்நிலைமையில் தங்களது முதலாளித்துவப் பொருளாதாரத்தை துரிதமாக வளர்க்கவேண்டும் என்ற ஒற்றை நோக்கத்திற்காக இரண்டு முகாமுடனும் கண்ணாமூச்சி விளையாடி மாறி மாறி பச்சோந்திகளாக உறவு கொண்டனர். இரண்டு முகாம்களிடமிருந்தும் ஆதாயம் பெறுவதற்காகவும் அதேவேளையில் புதிதாக மெலெழுந்துவரும் நாடுகளின் குறிப்பாக தெற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் சந்தைகளைக் கைப்பற்றும் நோக்கத்தோடும், அன்றைய ஆளும் இந்திய ஏகபோகங்கள் இருபுறமும் சாயாமல் நடுநிலைமை வகிப்பது போல் காட்டிக்கொண்டனர். இந்திய மக்களின் உண்மையான ஏகாதிபத்திய உணர்வை பயன்படுத்திக் கொண்டு சோசலிச முகாமோடு நட்பு கொண்டிருப்பதுபோல் பாசாங்கு செய்தனர். அமைதிப் புறா என்பது போல் காட்டிக் கொண்டு புதிதாக உருவெடுக்கும் நாடுகளை ஒருங்கிணைத்து தனது தலைமையில் அணிசேரா இயக்கம் என்ற ஒரு கூட்டணியை அமைத்தனர். ஆனால் அதன் பொருளாதாரத்தில் ஏகாதிபத்தியப் போக்கு பெருகிவந்த காரணத்தால் இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு அணிசேரா நாடுகள் கூட்டமைப்பில் இருந்த மற்ற நாடுகளின் நிலப்பாட்டைக் காட்டிலும் பலகீனமாக இருந்தது. ஆனால் திருத்தல்வாத தலைமையாலும் ஏகாதிபத்திய சக்திகளின் சதியாலும் உலக சோசலிச முகாம் வீழ்ந்த அந்த சோக சம்பவத்தால் ஏகாதிபத்திய முகாமிற்கும் சோசலிச முகாமிற்கும் இடையிலான முரண்பாடு இல்லாமல் போய்விட்டது. அதேபோல புதிதாக உருவெடுக்கும் தேசிய பூர்ஷ்வாக்களுக்கும் ஏகாதிபத்தியங்கள் மற்றும் சோசலிச முகாமிற்கும் இடையிலான இருபடி முரண்பாடும் இல்லாமல் போய்விட்டது. ஆக, அணிசேரா இயக்கம் செயலிழந்து போய்விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, மாறிவிட்ட ஒருதுருவ உலகில், அமெரிக்க ஏகாதிபத்தியம் வேட்டையாடத் தொடங்கிவிட்டது. மறுபுறம், ஆளும் இந்திய ஏகபோகம், ஆசிய வல்லரசாகவேண்டும் என்ற தங்களது ஆசையைத் தீர்த்துக் கொள்வதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் தங்களது உறவை பலப்படுத்தவேண்டும் என்றும் விரும்பினர். ஆக இந்த இரண்டு நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் நலன்கள் ஒத்துபோகத் தொடங்கியுள்ளன, அந்தநாட்டின் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்காக இது தேவைப்படுகிறது. இதனால்தான் இந்த உறவு என்பது தெளிவாகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா எடுப்பதற்கு ஆளும் இந்திய ஏகபோகங்களின் இந்த வர்க்க நலன்தான் ஆணிவேராகும்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து கிரிமினல் நடவடிக்கைகளுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இன்று மிகவும் வெறுக்கத்தக்கவர்களாகவும் சர்வதேச அரசியல் களத்தில் மேலும் மேலும் தனிமைப்படுத்தப்பட்டும் வருகின்றனர். கடந்த காலத்தில் அமெரிக்காவோடு நட்புறவு வைத்திருந்த இஸ்ரேல், பாகிஸ்தான், தைவான், பிலிப்பைன்ஸ், துருக்கி, யுகே, தாய்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள்கூட இன்று இந்த மனிதகுலத்தை மிகக்கொடிய முறையில் அடக்கியாளும் இந்த அதிகாரத்தின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களாகத் தரம்தாழ்ந்து போய்விட்டனர்.

இந்திய விடுதலைப்போராட்டம் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம். இந்த இயக்கத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங், அஸ்பஃகுல்லா, சூர்ய சென், பிரீத்திலதா, பாரதியார், போன்ற எண்ணற்ற தியாகிகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம் பரியத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். விடுதலைக்குப் பின்னரும் காலனி மற்றும் அரைக் காலனி நாடுகளின் விடுதலைப்போராட்டங்களை ஆதரித்த பெருமைக்குரியது இந்திய நாடு. ஆனால் இந்த அத்தனை பாரம்பரியப் பெருமைகளையும், இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வையும் துச்சமெனெக் காலிலிட்டு மிதித்து, தேசத்தைக் கட்டியெழுப்பிய தியாகிகளின் அர்ப்பணிப்பை அவமதித்து இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கைகோர்க்கின்றனர். எனவேதான், ஆளும் முதலாளித்துவங்களின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து அதற்கு சேவகம் செய்துவரும் அவர்களின் அரசியல் முகவரான மோடி அவமானகரமாக ஒபாமாவை வரவேற்கிறார். மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்திய உழைக்கும் மக்களின் நலன்களுக்கு அமெரிக்கா வோடு இன்று இந்தியா ஏற்படுத்தும் நெருக்கமான நட்புறவு மிகுந்த தீமையை ஏற்படுத்தும் என்பதில் கடுகளவும் சந்தேகம் இல்லை. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் செயல்பாட்டிற்கு வருவதற்காக அணு உலை விபத்து ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு வழங்குவதிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கின்றனர் என்ற செய்தி இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கிறது. இன்னும் எத்தனை துரோகங்கள் இந்த நட்புறவில் இருக்கிறது என்பதை கண்டறிய வேண்டும். எனவே இந்தியாவின் இந்த அமெரிக்கச் சார்பு நடவடிக்கையை முறியடிக்கும் விதமாக போர்–எதிர்ப்பு அமைதியை நேசிக்கும் ஜனநாயக எண்ணம் கொண்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சகலவிதமான சாத்தியங்களையும் பயன்படுத்தி வலுவான ஏகாதிபத்திய–எதிர்ப்பு இயக்கத்தை, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கத்தை நாடுமுழுவதும் கட்டியெழுப்பவேண்டியது அவசியமாகும். மனிதகுலத்தின் கொடிய எதிரி அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழியட்டும்!

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucic.in